بسم الله الرحمن الرحيم

# توضيح المسئلة مع الادلة
# في
# تحريك الاصبعة في الصلوٰة

# தொழுகையில் விரலை அசைக்கலாமா?


ஆசிரியர் :

மௌலானா **A. சையத் முஹம்மது கௌஸ் மதனி**

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | தொழுகையில் விரலை அசைக்கலாமா? |
| பக்கம் | : | 52 |
| மொழி | : | தமிழ் |
| ஆசிரியர் | : | A. சையத் முஹம்மது கௌஸ் மதனி |
| தொடர்புக்கு | : | 9840115998 |
| பிரதிகள் | : | 1000 |
| விலை | : | ரூ. 25/- |
| உரிமை | : | ஆசிரியருக்கே |
| பதிப்பு | : | முதல் பதிப்பு |
| அச்சு அமைப்பு | : | **RAZAA PUBLICATION**<br>15/3, Chanda Sahib Street,<br>Royapettah, Chennai - 14.<br>Mobile : 9840115998 |

# உள்ளே ...


முன்னுரை : 4

## முதல் பகுதி

தொழுகையில் விரலை அசைக்கக்கூடாது என்பதற்கான ஆதாரங்கள் : 13

தஷஹ்ஹுதில் விரலை உயர்த்தி நிறுத்தினார்கள் : 13

தஷஹ்ஹுதில் விரலால் சுட்டிக்காட்டினார்கள் : 17

தஷஹ்ஹுதில் விரலை அசைக்கவில்லை : 23

ஓர் சந்தேகத்திற்கு விளக்கம் : 24

தஷஹ்ஹுதில் துஆ என்றால் என்ன ? : 25

தஷஹ்ஹுதில் விரலால் சமிக்ஞை செய்வதேன்? : 28

தெளிவான விளக்கம் : 32

தஷஹ்ஹுதில் விரலால் சமிக்ஞை செய்வதேன்? ஹதீஸ் கலாவல்லுனர்களின் விளக்கம் : 35

## இரண்டாம் பகுதி

விரலாட்டிகளின் ஆதாரங்களுக்கு தக்க பதில்கள் : 37

விரலாட்டிகளுக்கு நமது கேள்வி? : 49

இறுதியாக : 50

முடிவுரை : 51

# Foreword...

نحمده ونصلى ونسلم على رسوله الكريم . اما بعد

I feel myself Very fortunate to express my views on the book "Thozugayil Viralai Asaikkalama" written by Moulana Syed Ghouse Madani Sahib. It's an excellent book on the subject especially in Tamil language. It also shows the great learning and scholarship of the author. There are hardly any books on this subject or Mas'ala in any language. This book supplies a very important need and also is a valuable contribution in enlightening the people who are misguided by the Wahabbi Ulemas on the Mas'ala of "Shaking the Finger of shahadah in Tashahhud".

In this book, Moulana Syed Ghouse Madani Sahib has clearly explained the Mas'ala of shaking or lifting the finger of Shahadah in Tashahhud by quoting numerous Ahadith of Prophet Sallalahu Alaihi Wasallam and Various other references, traditions of sahabas and other Islamic Scholars.

He has explained clearly that the act of lifting / shaking the finger once in Tashahhud is the Sunnah of Prophet Sallalahu Alaihi Wasallam and at the same time he has also proved that "Shaking the Finger of Shahadah continuosly in Tashahhud is against the sunnah of Prophet Sallalahu Alaihi Wasallam and is an Innovation (Bid'ah) in Islam.

It is earnestly hoped that the readers will study this book with an open mind and heart and will introduce this book in their own circles & try to prevent those who have become the victims of this Bid'ath (Shaking the finger of Shahadah Continuously in Tashahhud)

The author of this book deserves our Warmest Congratulations and sincere thanks. May Allah shower his mercy on him and accept his great Contribution in eliminating a misguiding Innovation.

- Aameen.

صلى الله تعالى وسلم على خير خلقه سيدنا ومولانا محمد صلى الله
عليه وسلم واله واصحابه اجمعين

By
Moulana Moulavi **Syed Mustafa Ali Misbahi** Ashrafi
Fazil, Al-Jamiatul Ashrafia
Mubarakpur, Azamgarh - U.P.

# கருத்துரை

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்

புகழ் அனைத்தும் அல்லாஹ்விடமிருந்தே வருகின்றன

ஸலவாத்தும், ஸலாமும் அகிலத்திற்க்கெல்லாம் அருட்கொடையாக உள்ள நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும், அவர்களின் குடும்பத்தார்கள் மீதும், அன்னாரின் சத்திய ஸஹாபாக்களாகிய தோழர்கள் மீதும், அன்னாரின் நேரிய வழியாகிய ஸுன்னத்தைப் பின் பற்றி நடப்பவர்கள் மீதும் உண்டாவதாக!

குழப்பவாதிகளிடம், “நீங்கள் பூமியில் குழப்பம் செய்யாதீர்கள்” என்று கூறப்பட்டால் அதற்கவர்கள் “நிச்சயமாக நாங்கள் சீர்திருத்தம் செய்வோர் தாம்” எனக் கூறுகிறார்கள் (2:11) என்று அல்லாஹுத்தஆலா இன்றைய நவீன குழப்பவாதிகள் பற்றி 1400 ஆண்டுகளுக்கு முன்னரே நமக்கு எச்சரித்துள்ளான். இவர்களுடைய பல குழப்பங்களில் தொழுகையில் தஷஹ்ஹுதில் விரலை ஆட்டிக் கொண்டு மற்ற தொழுகையாளிகளின் கவனத்தை சிதரடிப்பதும் ஒரு குழப்பமாகும். இக்குழப்பத்திலிருந்து பொது மக்களைத் தெளிவுபடுத்துவதற்கு இந்நூலாசிரியர் பெரு முயற்சி எடுத்துள்ளார். அல்லாஹுத்தஆலா அவருக்கு அருள் புரிவானாக!

தஷஹ்ஹுதில் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தன் விரலை ஆட்டிக் கொண்டியிருக்கவில்லை, மாறாக தன் விரலால் சுட்டிக் காட்டினார்கள் என்று ஆசிரியர் அவர்கள் ஸஹீஹான ஹதீஸ்கள் மூலம் தெளிவாக சுட்டிக்காட்டிய பிறகும், விரலை ஆட்டிக் கொண்டிருக்கும் இக்குழப்பவாதிகள் தங்களது சுட்டித்தனத்தை கைவிடுவார்களா?

ஏகத்துவத்திற்கு அடையாளமாக விரலை நீட்டுவது ஷைத்தானுக்கு இரும்பைவிட கடினமாகஇருப்பதாக நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியிருக்க, இதற்கு மாறாக இக்குழப்பவாதிகள் கலிமா விரலை

ஆட்டிக் கொண்டே இருப்பதினால், இவர்களுடைய ஏகத்துவ கொள்கையும் ஆட்டங் கண்டிருக்கிறது போலும், இந்த குழப்பவாதிகளின் நடவடிக்கைகளை காணும் போது, இவர்கள் தங்களின் மன இச்சையின்படி ஒரு மார்க்கத்தை உருவாக்கிக் கொண்டு, அதற்கு ஆதரவாக குர்ஆனையும், ஹதீஸையும் வளைத்துக் கொண்டு இருக்கிறார்களே தவிர, இவர்கள் குர்ஆன், ஹதீஸை உண்மையில் பின் பற்றி நடக்கவில்லை என்பது தெளிவாக தெரிகிறது.

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களால் சிறந்த காலத்தவர்கள் என்று போற்றப்பட்ட சிறந்த இமாம்களைப் பின் பற்றக் கூடாது என்று பிதற்றும் இந்த சிறு மதியாளர்கள் தங்களை ஒரு இமாமாக சித்தரித்துக் காட்டி அப்பாவி இஸ்லாமிய இளைஞர்களை தங்களின் மீடியாக்களின் மாய வலையில் சிக்க வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

தஷஹ்ஹுதில் விரலை நீட்டும் போது ஷைத்தான் விரண்டோடுகிறான் என்று ஹதீஸில் உள்ளது. ஆனால் இந்த குழப்பவாதிகள் விரலை ஆட்டுவதைப் பார்த்தால் விரண்டோடும் ஷைத்தானை தங்கள் அருகில் அழைப்பது போல் அல்லவா உள்ளது!.

துஆ என்றாலே தூரமாக விரண்டோடும் துற்பாக்கிய சாலிகளுக்கு அஷ்ஹது அன்லா இலாஹ இல்லல்லாஹ் ஓர் சிறந்த துஆ என்பது தெரிந்திருக்க நியாயமில்லை தான். முஃமின்கள் ஒன்று கூடி அல்லாஹ்விடம் துஆக்கேட்பதைக்கூட பித்அத் என்று பிதற்றித்திரியும் இந்த பித்அத்துக்காரர்களுக்கு, இறைவனிடம் துஆச் செய்யும் போது கூட முஃமின்களுடன் சேர்ந்திராமல் பிரிந்து செல்லும் பிரிவினைவாதிகளல்லவா இவர்கள்.

அல்லாஹ் ஒருவன் மட்டும் தான் இறைவன் என மனதில் உள்ளதை வெளிப்படுத்தி காட்டுவது தான் விரலை நீட்டுவதாகும்,

மாறாக இக்குழப்பவாதிகள் விரலை நீட்டுவதும், மடக்குவதுமாக செய்வதைப் பார்த்தால், இறைவன் இருக்கிறானா? இல்லையா? ஹைக்கி, நய்க்கி என்று கூறுவது போல் அல்லவா இருக்கிறது. ஒரு வேளை இவர்கள் இறைவனைப்பற்றி ஹைக்கீ, நய்க்கி கொள்கை உடையவர்களோ என்னவோ?. அல்லாஹ் தான் நன்கு அறிந்தவன். உண்மையை எத்திவைப்பது தான் நமது கடமை, இதைத்தான் இந்நூலாசிரியர் சிறப்பாகச் செய்திருக்கின்றார். அல்லாஹுத்தஆலா இது போன்ற பல நூல்கள் எழுத அவருக்கு அருள் புரிவானாக!

மௌலானா **அமீருத்தீன் ஆமிரி**

# அணிந்துரை

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்

அல்ஹம்துலில்லாஹி ரப்பில்ஆலமீன் வஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலா சைய்யிதில் முர்சலீன் வகாத்தமுன்நபிய்யீன் வஅலா ஆலிஹீ வ அஜ்வாஜிஹீ வஅஸ்ஹாபிஹீ அஜ்மயீன் அம்மா பஃது.

வாதத்திற்கு மருந்துண்டு, ஆனால் பிடிவாதத்திற்கு? உலகின் எந்த பகுதியிலும் மருந்தில்லை. ஒரு தேடலின் அடிப்படையில் சில தவறான கருத்துக்களை, தவறாக புரிந்துவைத்திருப்பது இயற்கை ஆயினும், தெளிவான விளக்கம் கிடைக்கும் போது அதை திருத்திக் கொள்வது தான், நேர்மையான மக்களின் நாகரீகமான நடவடிக்கை.

மார்க்கத்தை விளக்குகிறோம் என்ற அடிப்படையில் கடந்த பல ஆண்டுகளாக, மார்க்க அறிவில்லாத, அப்பாவிகளான மக்களிடம் மார்க்கம் சம்பந்தமான, பல்வேறு கருத்துத் திணிப்புக்களை சிலர் செய்து வருகின்றனர். ஒருபக்கம் உலகளாவிய அளவில், இஸ்லாமிய எதிரிகள், இஸ்லாத்தை நேரடியாக அல்லது மறைமுகமாக தாக்கி வரும் வேலையில், அதனால் உள்ளம் புண்பட்ட மக்கள், இஸ்லாத்தின் உணர்வுகளால் உந்தப்படும் போது, இஸ்லாமிய எதிரிகள், இஸ்லாத்தின் எதிர்ப்பின் பெயரால் என்னென்ன யுக்திகளை கையாள்கிறார்களோ, அதே யுக்திகளை இஸ்லாத்தின் பெயரால் செய்து, அதில் அப்பாவி முஸ்லிம்களை சிக்கவைப்பது நன்கு புரிகிறது.

1400 வருடங்களான நடைமுறையில் பழுதுள்ளது. இப்போதைய எங்களின் நடைமுறை, அப்பழுக்கற்றது என்கின்றனர் இவர்கள், அவர்களின் தவறான அணுகு முறையில் ஒன்றுதான் தொழுகையில், அத்தஹிய்யாத் இருப்பில் விரலாட்டும் முறை தவறானது என்பதற்கு சாட்டையடி விளக்கமாக அமைந்துள்ளது இந்நூல்.

இதை எளிய தமிழில், அழகிய முறையில் அமைத்துள்ளார் இதன் ஆசிரியர். விளக்கம் பெறும் மக்களுக்கு இந்த ஒரு நூல் போதுமானது. ஆகவே தான் பிடித்த முயலுக்கு முன்று கால் என்ற மனப்பாண்மையை விட்டு விட்டு உண்மையை உணர்ந்து செயல்படுமாறு சம்பந்தப்பட்டவர்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். அல்லாஹ் நேர்வழி காட்டுவானாக!

மௌலானா மௌலவி

**முஹம்மது சலீம் ஜமாலி**

# முன்னுரை

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்

அல்ஹம்துலில்லாஹி ரப்பில்ஆலமீன் வஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலா சைய்யிதில் முர்சலீன காதமுந்நபிய்யீன் வஅலா ஆலிஹீ வ அஜ்வாஜிஹீ வஅஸ்ஹாபிஹீ அஜ்மயீன் அம்மா பஃது.

மிக்க கருணையாளனும் அன்பாளனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால் ஆரம்பம் செய்கின்றேன். அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹு. என் இனிய இஸ்லாமிய சகோதரர்களே! அல்லாஹ் நமக்கு இஸ்லாம் என்னும் மகத்தான மார்க்கத்தை அருட்கொடையாக தமது அருளால் வழங்கி இருக்கின்றான். இஸ்லாத்தின் அடித்தளமாக விளங்கிக் கொண்டிருக்கும் தொழுகையையும் நம் மீது கடமையாக்கியுள்ளான். ஈமானுக்கு பிறகு தொழுகையின் அந்தஸ்தே உயர்ந்தது என்பது நம் எல்லோருக்கும் தெரிந்த விஷயமாகும். அல்லாஹ் சுப்ஹானஹு தஆலா தனது திருமறையில் பல இடங்களில் தொழுகையை நிலை நாட்ட உத்தர விடுகிறான். ஆகையால் ஒவ்வோரு முஸ்லிமின் மீதும் தொழுவது கடமையாக இருக்கின்றது. அதனால் நம் தொழுகையை நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காண்பித்து தந்த வழிமுறைகளின்படி அமைத்துக் கொள்ள வேண்டும். அப்படி இருந்தால் தான் நமது தொழுகையை இறைவன் ஏற்றுக் கொள்வான். நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்

قَالَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ ... صَلُّوا كَمَا رَأَيْتُمُونِي أُصَلِّي

صحيح البخاري - (٥٩٥)

**தர்ஜமா :-** நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் ... என்னை எப்படி தொழக்கண்டீர்களோ அப்படித் தொழுங்கள்.!

(ஆதாரம் : புகாரி : 595)

இந்த ஹதீஸின் மூலம் நமது தொழுகையின் ஒவ்வோரு அசைவும் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காட்டித்தந்த முறையாக இருக்க வேண்டும் என்பது தெளிவாகிறது.

அதே போல நாம் தொழுகையில் தஷஹ்ஹுத் இருப்பில் விரலை எப்படி வைத்திருக்க வேண்டும் என்பதிலும் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காண்பித்து தந்த வழிமுறைகளைத்தான் பின்பற்றி ஆகவேண்டும். ஆனால் இன்று சில குழப்பமான பிரிவுகள் தோன்றி நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காண்பித்து தந்த வழிமுறைகளுக்கு மாறாக தான்தோன்றித்தனமான முறைகளை செய்துகொண்டும் அப்பாவி மக்களை ஏமாற்றிக் கொண்டும் இருக்கிறார்கள்.

அப்படிப்பட்ட முறைகளில் ஒன்று தான் தஷஹ்ஹுத் இருப்பில் விரலை அசைப்பதும் ஆகும். இவர்கள் இமாம்களை பின்பற்றக் கூடாது, நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சுன்னத்துகளை பின்பற்றுவோம் என்று சொல்லிக் கொண்டு பாமர அப்பாவி முஸ்லிம் சகோதரர்களை ஏமாற்றிக்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் ஹதீஸ்களை பின்பற்ற வேண்டும் என்று கூறிக்கொண்டு தம்முடைய மோசமான ஆய்வுகளை பின்பற்றச் செய்து கொண்டிருக்கிறார்கள். இவர்களின் உண்மையான நிலை என்ன? இவர்கள் உண்மையில் ஹதீஸ்களை பின்பற்றுகிறார்களா? அல்லது தமது மனோ இச்சையை பின்பற்றுகிறார்களா? என்பதை தஷஹ்ஹுத் இருப்பில் விரலை அசைப்பது கூடுமா? கூடாதா? என்கின்ற ஆய்வின் மூலம் தெரிந்து கொள்ளலாம். ஒரு பானைக்கு ஒரு சோறு பதம் என்பது அறிவுடையவர்களுக்கு புரியும்.

தொழுகையில் தஷஹ்ஹுத் இருப்பில் விரலை எப்படி வைத்திருக்க வேண்டும் என்று பல சுன்னத்வல் ஜமாஅத்தைச் சார்ந்த உலமாக்கள் எண்ணற்ற ஸஹீஹான ஹதீஸ்களின் ஆதாரங்களின் மூலமாக விளக்கி கூறியும், எழுதியும் இருக்கிறார்கள். அப்படியிருந்தும் தன்னுடைய ஆட்ட மத்ஹபை நிலை நாட்டுவதற்காக, பிடிவாதமாக தான் செய்வது தான் சரி என்று இன்று சிலர் பிதற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆகையால் இச்சிறுநூலில் இவர்களின் முகத்திரையை கிழிக்கும் விதமாக தொழுகையில் விரலை அசைக்கக் கூடாது என்பதைபற்றிய என்னற்ற ஆதாரங்களை தந்து விளக்கிஇருக்கிறோம். மேலும் விரலாட்டிகள் விரலை அசைக்கலாம் என்று கூறும் ஆதாரங்களுக்கு தக்க பதிலையும் தந்திருக்கிறோம். ஆகவே இந்நூலை இஸ்லாமிய சகோதரர்கள் படித்து உண்மைநிலையை அறிந்து நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காண்பித்து தந்த வழிமுறைகளை பின்பற்றி தமது தொழுகையை சீர்குலைவதை விட்டும் பாதுகாத்துக் கொள்வார்களாக.

அல்லாஹ் நமக்கு உண்மையை விளங்கக்கூடிய வாய்ப்பை தந்து அருள்வானாக.!

**ஆமீன்.**

**பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்**

இந்த நூலை இரண்டு பகுதிகளாக பிரித்திருக்கின்றோம். முதல் பகுதியில் தொழுகையில் விரலை அசைக்கக்கூடாது என்பதைப் பற்றிய ஸஹீஹான ஹதீஸ்களின் ஆதாரங்களும், இரண்டாம் பகுதியில் விரலாட்டிகளின் ஆதாரங்களுக்கு தக்க பதில்களையும் தந்திருக்கின்றோம் வாருங்கள் காண்போம்.

## முதல் பகுதி

**தொழுகையில் விரலை அசைக்கக்கூடாது என்பதற்கான ஆதாரங்கள் :**

இஸ்லாமியச் சகோதரர்களே இந்த பகுதியில் நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தொழுகையில் விரலை எப்படி வைத்திருந்தார்கள் என்பதைப்பற்றி ஸஹீஹான ஹதீஸ்களைக் கொண்டு ஆதாரங்களை காட்டியிருக்கின்றோம்.

முதலாவதாக தொழுகையில் நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தஷஹ்ஹுது இருப்பில் ஆட்காட்டி விரலை உயர்த்தி நிறுத்தினார்கள் என்பதற்கான ஆதாரங்களைப் பார்ப்போம்.

**ஹதீஸ் : 1**

عَنْ ابْنِ عُمَرَ أَنَّ النَّبِيَّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ كَانَ إِذَا جَلَسَ فِي الصَّلَاةِ وَضَعَ يَدَيْهِ عَلَى رُكْبَتَيْهِ وَرَفَعَ إِصْبَعَهُ الْيُمْنَى الَّتِي تَلِي الْإِبْهَامَ فَدَعَا بِهَا وَيَدَهُ الْيُسْرَى عَلَى رُكْبَتِهِ الْيُسْرَى بَاسِطَهَا عَلَيْهَا.

صحيح مسلم - (٩١١)

**தர்ஜமா:-** ஹஜ்ரத் அப்துல்லஹ் இப்னு உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கின்றார்கள், நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தொழுகையில் (தஷஹ்ஹுத் இருப்பில்) அமரும் போது இரு கைகளையும் இரு முழங்கால்களில் வைத்து பெருவிரலை அடுத்து இருக்கும் வலது கைவிரலை துஆ ஓதிய நிலையில் உயர்த்தினார்கள், மேலும் தனது இடது கையை தனது இடது முழங்காலில் விரித்த வண்ணம் வைத்திருந்தார்கள்.

(ஆதாரம் : முஸ்லிம் : 911)

**ஹதீஸ் : 2**

عَنِ ابْنِ عُمَرَ : أَنَّ النَّبِىَّ صلى الله عليه وسـلم كَانَ إِذَا قَعَدَ فِى آخِرِ الــصَّلاَةِ وَضَعَ يَدَهُ الْيُسْرَى عَلَى رُكْبَتِهِ الْيُسْرَى ، وَوَضَعَ يَدَهُ الْيُمْنَى عَلَى رُكْبَتِهِ الْيُمْنَى وَنَصَبَ إِصْبَعَهُ.

سنن الدارمي - (1389)

**தர்ஜமா:-** ஹஜ்ரத் அப்துல்லாஹ் இப்னு உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கின்றார்கள், நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தொழுகையின் கடைசியில் அமரும்பொழுது இடது கையை இடது முழங்காலிலும், வலது கையை வலது முழங்காலிலும் வைத்து சுட்டு விரலை உயர்த்தி நிறுத்தி வைக்கக்கூடியவர்களாக இருந்தார்கள்.

(ஆதாரம் : தாரமீ: 1389)

**ஹதீஸ் : 3**

قَالَ أَخْبَرَنِي عَاصِمُ بْنُ كُلَيْبٍ الْجَرْمِيُّ عَنْ أَبِيهِ عَنْ جَدِّهِ قَالَ دَخَلْتُ عَلَى النَّبِيِّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ وَهُوَ يُصَلِّي وَقَدْ وَضَعَ يَدَهُ الْيُسْرَى عَلَى فَخِذِهِ الْيُسْرَى وَوَضَعَ يَدَهُ الْيُمْنَى عَلَى فَخِذِهِ الْيُمْنَى وَقَبَضَ أَصَابِعَهُ وَبَسَطَ السَّبَّابَةَ وَهُوَ يَقُولُ يَا مُقَلِّبَ الْقُلُوبِ ثَبِّتْ قَلْبِي عَلَى دِينِكَ.

سنن الترمذي - (٣٥١١)

**தர்ஜமா:-** ஹஜ்ரத் ஆஸிம் பின் குலைப் தனது தந்தை மற்றும் பாட்டனார் மூலமாக அறிவிக்கிறார்கள், நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தொழுது கொண்டிருக்கும் பொழுது, நான் அவர்களிடம் சென்றேன் அப்பொழுது அவர்கள் இடது கையை இடது தொடையில் வைத்து இருந்தார்கள், வலது கையை வலது தொடையில் வைத்து

இருந்தார்கள், அப்போது விரல்களை மடக்கி சுட்டு விரலை நீட்டி வைத்துக்கொண்டு இதயங்களை புரட்டக் கூடியவனே! எனது இதயத்தை உன் மார்க்கத்தின் மீது நிலைப்படுத்தி வைப்பாயாக! என்று பிரார்த்தித்தார்கள்.

(ஆதாரம் : திர்மிதீ : 3511)

**ஹதீஸ் : 4**

عَنْ مَالِكِ بْنِ نُمَيْرٍ الْخُزَاعِيِّ عَنْ أَبِيهِ قَالَ رَأَيْتُ النَّبِيَّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ وَاضِعًا ذِرَاعَهُ الْيُمْنَى عَلَى فَخِذِهِ الْيُمْنَى رَافِعًا إِصْبَعَهُ السَّبَّابَةَ قَدْ حَنَاهَا شيأ.

سنن أبي داود - (٨٤٠)

**தர்ஜமா:-** ஹஜ்ரத் மாலிக் இப்னு நுமைர் அல் குஜாயியீ அவர்கள் தனது தந்தை மூலமாக அறிவிக்கிறார்கள், நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தனது வலது முழங்கையை தனது வலது தொடையின் மீது வைத்து சுட்டு விரலை சிறிது சாய்த்த நிலையில் உயர்த்தியதை நான் பார்த்தேன் என்றார்கள்.

(ஆதாரம் : அபூதவூத் : 840)

**ஹதீஸ் : 5**

حَدَّثَنَا عَاصِمُ بْنُ كُلَيْبٍ عَنْ أَبِيهِ عَنْ وَائِلِ بْنِ حُجْرٍ قَالَ أَتَيْتُ رَسُولَ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ فَرَأَيْتُهُ.... وَوَضَعَ يَدَهُ الْيُمْنَى عَلَى فَخِذِهِ الْيُمْنَى وَنَصَبَ أُصْبُعَهُ لِلدُّعَاءِ وَوَضَعَ يَدَهُ الْيُسْرَى عَلَى فَخِذِهِ الْيُسْرَى...

سنن النسائي - (١١٤٧)

**தர்ஜமா:-** ஹஜ்ரத் வாயில் இப்னு ஹுஜ்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள், நான் நபிகள் நாயகம்

(ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடம் வந்தேன் அப்பொழுது அவர்கள் (தொழுகையில் தஷஹ்ஹுத் இருப்பில் அமரும் போது) தனது வலது கையை தனது வலது தொடையின் மீது வைத்து சுட்டு விரலை துஆவிற்காக உயர்த்தி நிறுத்தினார்கள்.

(ஆதாரம் : நஸாயீ : 1147)

**ஹதீஸ் : 6**

عَنْ عَاصِمِ بْنِ كُلَيْبٍ عَنْ أَبِيهِ عَنْ وَائِلِ بْنِ حُجْرٍ قَالَ رَأَيْتُ النَّبِيَّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ قَدْ حَلَّقَ بِالْإِبْهَامِ وَالْوُسْطَى وَرَفَعَ الَّتِي تَلِيهِمَا يَدْعُو بِهَا فِي التَّشَهُّدِ.

سنن ابن ماجه - (٩٠٢)

**தர்ஜமா:-** ஹஜ்ரத் வாயில் இப்னு ஹுஜ்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறினார்கள், நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தஷஹ்ஹுதின் அமர்வில் தனது கட்டைவிரல் மற்றும் நடுவிரலைக் கொண்டு வட்டமாக்கி துஆ ஓதிய வண்ணம் அவ்விரு விரல்களுக்கு அடுத்துள்ள சுட்டு விரலை உயர்த்தினார்கள்.

(ஆதாரம் : இப்னு மாஜா : 902)

இதுவரை நாம் நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தஷஹ்ஹுத்து இருப்பில் விரலை உயர்த்தினார்கள் என்று வரக்கூடிய ஹதீஸ்களின் ஆதாரங்களைக் கண்டோம், அதில் தெள்ளத்தெளிவாக தன் விரலை உயர்த்தினார்கள், உயர்த்தி நிறுத்தி வைக்கக்கூடியவர்களாக இருந்தார்கள் என்பது தெளிவாகிறது. ஆகையால் தொழுகையில் விரலை அசைப்பது என்பது ஸஹீஹான ஹதீஸ்களுக்கு மாற்றமானது என்பது தெளிவாகிறது. மேலும் தொழுகையில் விரலால் சமிக்ஞை செய்தார்கள் என்று வரக்கூடிய ஹதீஸ்களைப் பார்ப்போம்.

**தஷஹ்ஹுத்தில் விரலால் சுட்டிக்காட்டினார்கள் :**

சகோதரர்களே! தொழுகையில் நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தஷஹ்ஹுது இருப்பில் ஆட்காட்டி விரலால் சுட்டிக் காட்டினார்கள் என்பதற்கான ஆதாரங்களைப் பார்ப்போம்.

**ஹதீஸ் : 1**

عَنْ ابْنِ عُمَرَ أَنَّ رَسُولَ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ كَانَ إِذَا قَعَدَ فِي التَّشَهُّدِ وَضَعَ يَدَهُ الْيُسْرَى عَلَى رُكْبَتِهِ الْيُسْرَى وَوَضَعَ يَدَهُ الْيُمْنَى عَلَى رُكْبَتِهِ الْيُمْنَى وَعَقَدَ ثَلَاثَةً وَخَمْسِينَ وَأَشَارَ بِالسَّبَّابَةِ.

صحيح مسلم - (٩١٢)

**தர்ஜமா :-** ஹஜ்ரத் அப்துல்லஹ் இப்னு உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கின்றார்கள், நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தஷஹ்ஹுத் இருப்பில் அமரும் போது தனது இடது கையை இடது முழங்காலிலும், வலது கையை வலது முழங்காலிலும் வைத்து 53 ஆக முடிச்சிட்டு வைத்தபடி சுட்டு விரலால் சுட்டிக்காட்டினார்கள்.

(ஆதாரம் : முஸ்லிம் : 912)

ஹதீஸ் : 2

عَنْ عَلِيِّ بْنِ عَبْدِ الرَّحْمَنِ الْمُعَاوِيِّ أَنَّهُ قَالَ رَآنِي عَبْدُ اللَّهِ بْنُ عُمَرَ وَأَنَا أَعْبَثُ بِالْحَصَى فِي الصَّلَاةِ فَلَمَّا انْصَرَفَ نَهَانِي فَقَالَ اصْنَعْ كَمَا كَانَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ يَصْنَعُ فَقُلْتُ وَكَيْفَ كَانَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ يَصْنَعُ قَالَ كَانَ إِذَا جَلَسَ فِي الصَّلَاةِ وَضَعَ كَفَّهُ الْيُمْنَى عَلَى فَخِذِهِ الْيُمْنَى وَقَبَضَ أَصَابِعَهُ كُلَّهَا وَأَشَارَ بِإِصْبَعِهِ الَّتِي تَلِي الْإِبْهَامَ وَوَضَعَ كَفَّهُ الْيُسْرَى عَلَى فَخِذِهِ الْيُسْرَى.

صحيح مسلم - (٩١٣)

**தர்ஜமா:-** ஹஜ்ரத் அலிய்யுப்னு அப்துர் ரஹ்மான் முஆவிய்யீ அவர்கள் கூறினார்கள், நான் தொழும் பொழுது (சிறு) கற்களால் விளையாடிக் கொண்டிருந்ததைக் கண்ட இப்னு உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் தம் தொழுகையை முடித்து கொண்டு என்னை (விளையாட வேண்டாம் என்று) தடுத்தனர். அன்றி, அவர்கள், நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் செய்து வந்த வண்ணம் நீரும் செய்வீராக! என்று கூறினார்கள். அதற்கு நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் என்ன செய்தனர் என நான் கேட்க. அண்ணல் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தொழுகையில் (அத்தஹிய்யாத்தில்) உட்கார்ந்தால் தங்களின் வலது உள்ளங்கையைத் தங்களின் வலது தொடை மீது வைத்து எல்லா விரல்களையும் மடக்கிக் கொண்டு பெருவிரலை அடுத்திருக்கும் (கலிமா) விரலைக் கொண்டு சமிக்ஞை செய்தும் தங்களின் இடது உள்ளங்கையைத் தங்களின் இடது தொடை மீது வைத்தும் வந்தனர் என்று கூறினர்.
(ஆதாரம் : முஸ்லிம் : 913, முஅத்தா : 184, அபூதாவூத் : 837, நஸாயீ : 1250)

**ஹதீஸ் : 3**

عَنْ عَبْدِ اللَّهِ بْنِ الزُّبَيْرِ قَالَ كَانَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ ... وَوَضَعَ يَدَهُ الْيُسْرَى عَلَى رُكْبَتِهِ الْيُسْرَى وَوَضَعَ يَدَهُ الْيُمْنَى عَلَى فَخِذِهِ الْيُمْنَى وَأَشَارَ بِإِصْبَعِهِ.

صحيح مسلم - (٩٠٩)

**தர்ஜமா:-** ஹஜ்ரத் அப்துல்லாஹ் பின் ஜுபைர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள், நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ... தனது இடது கையை இடது முழங்கால் மீதும், தனது வலது கையை வலது தொடையின் மீதும் வைத்து, தனது கலிமா விரலால் சுட்டிக்காட்டினார்கள்.

(ஆதாரம் : முஸ்லிம் : 909, பைஹகீ)

**ஹதீஸ் : 4**

فَقَالَ أَبُو حُمَيْدٍ أَنَا أَعْلَمُكُمْ بِصَلَاةِ رَسُولِ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ إِنَّ رَسُولَ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ جَلَسَ يَعْنِي لِلتَّشَهُّدِ ....وَوَضَعَ كَفَّهُ الْيُمْنَى عَلَى رُكْبَتِهِ الْيُمْنَى وَكَفَّهُ الْيُسْرَى عَلَى رُكْبَتِهِ الْيُسْرَى وَأَشَارَ بِأُصْبُعِهِ يَعْنِي السَّبَّابَةَ.

قَالَ أَبُو عِيسَى وَهَذَا حَدِيثٌ حَسَنٌ صَحِيحٌ

سنن الترمذي - (٢٧٠)

**தர்ஜமா:-** ஹஜ்ரத் அபூ ஹுமைதி (ரழியல்லாஹூ அன்ஹூ) அவர்கள் கூறினார்கள் நான் அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம்) அவர்களின் தொழுகையைப் பற்றி நன்கு அறிவேன். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொழுகையில் தஷஹ்ஹூத்திற்காக அமரும் போது தனது வலது உள்ளங்கையை வலது முழங்கால் மீதும், தனது இடது உள்ளங்கையை இடது தொடையின் மீதும் வைத்து, தனது (கலிமா) விரலால் சுட்டிக்காட்டினார்கள்.

(ஆதாரம் : திர்மிதீ : 270)

இந்த ஹதீஸை இமாம் திர்மிதீ அவர்கள் ஹஸன் என்றும் ஸஹீஹ் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

**ஹதீஸ் : 5**

عَنْ مَالِكِ بْنِ نُمَيْرٍ الْخُزَاعِيِّ عَنْ أَبِيهِ قَالَ رَأَيْتُ النَّبِيَّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ وَاضِعًا يَدَهُ الْيُمْنَى عَلَى فَخِذِهِ الْيُمْنَى فِي الصَّلَاةِ وَيُشِيرُ بِإِصْبَعِهِ.

سنن ابن ماجه - (٩٠١)

**தர்ஜமா:-** ஹஜ்ரத் மாலிக் இப்னு நுமைர் அல் குஜயீ (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் தனது தந்தை மூலமாக அறிவிக்கிறார்கள், நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தொழுகையில் தனது வலது கையை வலது தொடையின் மீது வைத்து தனது விரலால் சுட்டிக்காட்டியதை நான் கண்டேன் என்றார்கள்.

(ஆதாரம் : இப்னு மாஜா : 901)

**ஹதீஸ் : 6**

عَنْ وَائِلٍ الْحَضْرَمِيِّ أَنَّهُ رَأَى النَّبِيَّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ صَلَّى ... وَضَعَ فَخِذَهُ الْيُمْنَى عَلَى الْيُسْرَى وَوَضَعَ يَدَهُ الْيُمْنَى وَأَشَارَ بِإِصْبَعِهِ السَّبَّابَةِ وَحَلَّقَ بِالْوُسْطَى.

مسند أحمد - (١٨١٢١)

தர்ஜுமா : ஹஜ்ரத் வாயில் ஹஜ்ரமி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள், நான் நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தொழுவதைக் கண்டேன் ........ (அப்பொழுது) தனது இடது கையை தனது இடது தொடையின் மீது வைத்து தனது வலது கையை தனது வலது தொடையின் மீது வைத்தனர், பின் தனது கலிமா விரலால் சைக்கினை செய்தார்கள் இன்னும் நடுவிரலை வட்டமிட்ட நிலையில் வைத்திருந்தார்கள்.

(ஆதாரம் : அஹ்மத் : 18121)

**ஹதீஸ் : 7**

عَنْ نَافِعٍ قَالَ كَانَ عَبْدُ اللَّهِ بْنُ عُمَرَ إِذَا جَلَسَ فِي الصَّلَاةِ وَضَعَ يَدَيْهِ عَلَى رُكْبَتَيْهِ وَأَشَارَ بِإِصْبَعِهِ وَأَتْبَعَهَا بَصَرَهُ ثُمَّ قَالَ قَالَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ لَهِيَ أَشَدُّ عَلَى الشَّيْطَانِ مِنْ الْحَدِيدِ يَعْنِي السَّبَّابَةَ.

مسند أحمد - (٥٧٢٨)

**தர்ஜமா:-** ஹஜ்ரத் நாபிஃ (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள், ஹஜ்ரத் அப்துல்லா இப்னு உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் தொழுகையில் (தஷஹ்ஹுத் இருப்பில்)

அமரும் போது தன்னுடைய இரு முழங்காளில் தன்னுடைய இரு கைகளையும் வைத்து (கலிமா) விரலால் சுட்டிக்காட்டி தன்னுடைய பார்வையை அதன் மேலே செலுத்தி வரக்கூடியவர்களாக இருந்தார்கள். பிறகு கூறினார்கள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் இப்படிச் செய்வது (அதாவது கலிமா விரலால் சுட்டிக்காட்டுவது,) ஷைத்தானுக்கு இரும்பை விட மிகக் கடுமையாக இருக்கின்றது என்று கூறினார்கள்.

(ஆதாரம் : அஹ்மத் : 5728)

**ஹதீஸ் : 8**

حدثنا عامر بن عبد الله بن الزبير عن ابيه قال كان رسول الله صلى الله عليه وسلم إذا جلس في ثنتين أو في اربع وضع يديه على ركبتيه ثم اشار باصبعه.

السنن الكبرى للبيهقي - (ج ٢ / ص ١٣٢)

**தர்ஜமா:-** ஹஜ்ரத் அப்துல்லாஹ் பின் ஜுபைர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள், நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தனது (தஷஹ்ஹுத்தின்) இரண்டாவது (ரக்அத்) அமர்விலும், நான்காவது (ரக்அத்) அமர்விலும் தனது இரு கைகளை தனது முழங்கால்கள் மீது வைத்து பிறகு தனது விரலால் சுட்டிக்காட்டக் கூடியவர்களாக இருப்பார்கள்.

(ஆதாரம் : பைஹகீ : 2903)

**ஹதீஸ் : 9**

ثناعاصم بن كليب عن ابيه عن وائل بن حجر ان النبي صلى الله عليه وسلم ... عقد الخنصر والبنصر ثم حلق الوسطى بالابهام واشار بالسبابة.

السنن الكبرى للبيهقي - (ج ٢ / ص ١٣١)

**தர்ஜமா:-** ஹஜ்ரத் வாயில் இப்னு ஹுஜர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள், நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் .... நடுவிரல் மற்றும் கட்டைவிரலை வட்டவடிவில் வைத்துக் கொண்டு ஆட்காட்டி விரலால் சுட்டிக்காட்டினார்கள்.

(ஆதாரம் : பைஹகீ)

**ஹதீஸ் : 10**

عن سعيد بن عبد الرحمن بن أبزى قال كان رسول الله صلى الله عليه وسلم إذا جلس في الصلاة وضع يده على فخذه يشير بإصبعه في الدعاء.

مصنف ابن أبي شيبة - (ج ٢ / ص ٣٦٨)

**தர்ஜமா:-** ஹஜ்ரத் அப்துர்ரஹ்மான் பின் அப்ஜி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள், நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள், தொழுகையில் (தஷஹ்ஹுத் - அத்தஹிய்யாத் அமர்வில்) இருக்கும் போது, துஆவில் தனது கரத்தை தொடையின் மீது வைத்தவர்களாக சைக்கினை செய்வார்கள்.

(ஆதாரம் : முஸன்னஃப் இப்னு அபீஷைபஹ்)

**ஹதீஸ் : 11**

حدثنا وكيع عن مسعر عن أبي علقمة عن عائشة قالت إن الله يحب أن يدعو هكذا وأشارت بإصبع واحدة.

مصنف ابن أبي شيبة - (ج ٢ / ص ٣٦٨)

**தர்ஜமா:-** அன்னை ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்களிடமிருந்து அபீ அல்கமா ரழியல்லாஹு அன்ஹு அறிவிக்கிறார்கள், நிச்சயமாக அல்லாஹ் இவ்வாறு துஆ செய்வதை விரும்புகிறான் (என்று கூறிய அன்னை ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள்) தனது ஒரு விரலைக் கொண்டு சைக்கினை செய்தார்கள்.

(ஆதாரம் : முஸன்னஃப் இப்னு அபீஷைபஹ்)

**ஹதீஸ் : 12**

حدثنا حفص بن غياث عن عثمان بن الاسود عن مجاهد أنه قـــال الدعاء هكذا وأشار بإصبع واحدة مقمعة الشيطان.

مصنف ابن أبي شيبة - (ج ٢ / ص ٣٦٨)

**தர்ஜமா:-** ஹஜ்ரத் முஜாஹித் அவர்கள், ஒரு விரலால் சைக்கினை செய்தவாறு, துஆ என்பது இவ்வாறு ஷைத்தானை விரட்டுவதாகும் என்று கூறினார்கள்.

(ஆதாரம் : முஸன்னஃப் இப்னு அபீஷைபஹ்)

மேற்கண்ட ஹதீஸ்களின் ஆதாரங்களின் மூலமாக நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தஷஹ்ஹுதில் தன்விரலால் (இஷாரா) சமிக்ஞை செய்தார்கள் (சுட்டிக்காட்டினார்) கள் என்பது தெள்ளத்தெளிவாகிறது. மேலும் விரலால் சுட்டிக்காட்டுவது ஷைத்தானுக்கு இரும்பை விட கடினமானது என்பதையும் அறிய முடிகிறது. இந்த வஹ்ஹாபிகளுக்கு விரலால் சுட்டிக்காட்டுவது இரும்பை விட கடினமாக தோன்றுகிறது போலும் அதனால் தான் அசைக்க முற்படுகிறார்கள். அல்லாஹ் இப்படிப்பட்டவர்களை விட்டும் நம்மைகாப்பாற்றுவானாக! ஆமீன். இதுவரை நாம் நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள், தனது தொழுகையில் விரலை எப்படி வைத்திருந்தார்கள் என்பதற்கான ஆதாரங்களைக் கண்டோம் இப்பொழுது தொழுகையில் விரலை அசைக்க மாட்டார்கள் என்று தெளிவாக வரக்கூடிய ஆதாரத்தைக் காண்போம்.

**தஷஹ்ஹுதில் விரலை அசைக்கவில்லை :**

**ஹதீஸ் :**

عَنْ عَبْدِ اللَّهِ بْنِ الزُّبَيْرِ أَنَّ النَّبِيَّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ كَانَ يُشِيرُ بِأُصْبُعِهِ إِذَا دَعَا وَلَا يُحَرِّكُهَا.

سنن النسائي - (١٢٥٣)

**தர்ஜமா:-** ஹஜ்ரத் அப்துல்லாஹ் இப்னு ஜுபைர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள் நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் (தஷஹ்ஹுத்தில்) தனது (ஆட்காட்டி) விரலால் துஆ (தஷஹ்ஹுத்) ஓதும் பொழுது சுட்டிக்காட்டும் வழமை கொண்டவர்களாக இருப்பார்கள் அதனை ஒரு போதும் அசைக்கமாட்டார்கள்.

(ஆதாரம் : நஸாயீ : 1253, அபூதாவூத் : 839)

அல்ஹம்துலில்லாஹ் தொழுகையில் விரலை அசைக்கக்கூடாது என்பதற்கு இதை விட வேறு என்ன ஆதாரம் வேண்டும், நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் விரலை அசைக்கவில்லை என்று ஹதீஸ் கூறுகிறது. ஆனால் நாங்கள் ஹதீஸ்களை ஏற்றுக் கொள்ளமாட்டோம் என்று சொல்லும் வஹ்ஹாபிகள் பிடிவாதம் ஒன்றைத் தான் பின்பற்றுகிறார்கள் என்பது தெளிவாகிறது. ஆகையால் சகோதரர்களே! பிடிவாதத்தை விட்டு விடுங்கள்! ஹதீஸ்களை பின்பற்றுங்கள்.!

**ஓர் சந்தேகத்திற்கு விளக்கம் :**

சகோதரர்களே! மேற்கண்ட ஹதீஸ்களில் தஷஹ்ஹுதில் துஆ ஓதிய நிலையில் விரலை உயர்த்தினார்கள் என்றும் விரலை உயர்த்தி துஆச் செய்தார்கள் என்றும் வந்துள்ளதே தஷஹ்ஹுதில் ஓதக்கூடிய துஆ என்பதற்கு என்ன அர்த்தம் என்கிற ஓர் கேள்வி இங்கு எழுகிறது. இந்த கேள்விக்கு ஹதீஸ்களை ஆராய்ந்தால் நமக்கு தெளிவான பதில் கிடைக்கிறது.

நாம் தஷஹ்ஹுதில் அஷ்ஹது அன்லா இலாஹ இல்லல்லாஹ் என்று ஓதக்கூடிய கலிமா ஷஹாதத் என்பதற்குத் தான் துஆ என்று இங்கு சொல்லப்படுகின்றது. இங்கு இவர்கள் ஓர் கேள்வியை எழுப்பலாம் அதாவது ஏன் அஷ்ஹது அன்லா இலாஹ இல்லல்லாஹ் என்று கூறுவதை துஆ என்று மாற்றிக் கூறுகிறீர்கள், துஆ என்பதற்கும் அஷ்ஹது அன்லா இலாஹ இல்லல்லாஹ் என்று செல்லுவதற்கும் என்ன சம்பந்தம்?

**பதில் :** துஆ என்பதற்கு அஷ்ஹது அன்லா இலாஹ இல்லல்லாஹ் என்று சொல்வது மாற்றிக் கூறுவது ஆகாது ஏனெனில் இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. முதலாவது : தஷஹ்ஹுதில் நாம் தம் சுட்டு விரலால் சமிக்கை செய்வது என்பது, அல்லாஹ் ஒருவனே என்பதை தம் செயலால் செய்து காட்டி

உணர்த்த வேண்டும் என்ற நோக்கத்தில் தான் செய்யப்படுகின்ற ஓர் செயலாக இருக்கிறது. இதற்கு பல ஹதீஸ்கள் நமக்கு ஆதாரங்களாக இருக்கின்றன. இதைப்பற்றி நாம் பிறகு விளக்கமாக கூறுகிறோம். இதிலிருந்து அல்லாஹ் ஒருவனே என்பதை சொல்லால் வெளிப்படுத்தும் அஷ்ஹது அன்லா இலாஹ இல்லல்லாஹ் என்ற சொற்றொடர் தான் மேற்படி சமிக்ஞைக்குறிய இடமாகிறது.

எனவே, அஷ்ஹது அன்லா இலாஹ இல்லல்லாஹ் என்ற சொற்றொடர் மூலம் அல்லாஹ் ஒருவனே என்பதை சொல்லால் கூறும்பொழுது விரலால் சமிக்ஞை செய்து செயலாலும் உணர்த்த வேண்டும் என்ற அடிப்படையில் தான் துஆ என்பதற்கு ஷஹாதத் என்று கூறுகிறோம்.

அஷ்ஹது அன்லா இலாஹ இல்லல்லாஹ் என்பது சிறந்த துஆ என்பது பல்வேறு ஹதீஸ்களில் கூறப்பட்டுள்ளது. எனவே துஆ என்பதற்கு அஷ்ஹது அன்லா இலாஹ இல்லல்லாஹ் என்று ஓதும் போது என்று பொருள் கொள்வதும் மிகவும் பொருத்தமானதாகும். துஆ என்றால் எது என்பதை கீழ்காணும் ஹதீஸ்கள் விளக்குகின்றன.

**ஹதீஸ் : 1**

عَنْ عَمْرِو بْنِ شُعَيْبٍ عَنْ أَبِيهِ عَنْ جَدِّهِ أَنَّ النَّبِيَّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ خَيْرُ الدُّعَاءِ دُعَاءُ يَوْمِ عَرَفَةَ وَخَيْرُ مَا قُلْتُ أَنَا وَالنَّبِيُّونَ مِنْ قَبْلِي لَا إِلَهَ إِلَّا اللَّهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ لَهُ الْمُلْكُ وَلَهُ الْحَمْدُ وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ قَدِيرٌ.

سنن الترمذي - (٣٥٠٩)

**தர்ஜமா:-** ஹஜ்ரத் அம்ர் இப்னு ஷுஅய்ப் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள் நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள் துஆக்களில் சிறந்தது அரஃபாவில் செய்யும் துஆ ஆகும், நானும்.

எனக்கு முன்னிருந்த நபிமார்களும் கூறியதில் மிகச் சிறந்தது லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீகலஹு ............ என்பதாகும்.
(ஆதாரம் : திர்மிதீ ; 3509, முஅத்தாவில் தல்ஹா பின் உபைதுல்லாஹ் பின் குரைஜ் மூலமாக 449/ 841 ஹதீஸாக அறிவிக்கப்பட்டிருக்கிறது)

**ஹதீஸ் : 2**

عن علي ، رضي الله عنه قال : قال رسول الله صلى الله عليه وسلم : » أفضل ما قلت أنا والنبيون قبلي عشية عرفة لا إله إلا الله وحده ، لا شريك له ، له الملك وله الحمد ، وهو على كل شيء قدير .

الدعاء للطبراني - (٨٠٠)

**தர்ஜமா:-** ஹஜ்ரத் அலி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள் நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள் அரஃபா தினத்தின் மாலையில் நானும் எனக்கு முன்னிருந்த நபிமார்களும் கூறியதில் மிகச் சிறந்தது .....லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீகலஹு...........என்பதாகும்.
(ஆதாரம் : தப்ரானி நூல் கிதாபுத் துஆ : 800, பைஹகீ)

**ஹதீஸ் : 3**

عن ابن عمر ، رضي الله عنه قال : كان عامة دعاء النبي صلى الله عليه وسلم والأنبياء قبله عليهم السلام عشية عرفة : » لا إله إلا الله وحده لا شريك له ، له الملك وله الحمد ، وهو على كل شيء قدير .

الدعاء للطبراني - (٨٠١)

**தர்ஜமா:-** ஹஜ்ரத் அப்துல்லாஹ் இப்னு உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறினார்கள்: நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களும் மற்றும் அவர்களுக்கு முன்னிருந்த நபிமார்களும் அரஃபா தினத்தின் மாலையில் கூறிய பொதுவான துஆ ..... சிாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீகலஹு........... என்பதாகும்.
(ஆதாரம் : தப்ரானி நூல் கிதாபுத் துஆ : 801)

மேற்கண்ட ஹதீஸ்களின் மூலமாக லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீகலஹு என்பது துஆவாக இருக்கிறது என்பது தெளிவாகிறது. எனவேதான், துஆ ஓதிய நிலையில் என்பதற்கு அஷ்ஹது அன்லா இலாஹ இல்லல்லாஹ் ஓதும் பொழுது என்று கூறுவது மாற்றிக் கூறுவது அல்ல மாறாக விளக்கிக் கூறுவதாகும் என்பதை விளங்க முடிகிறது.

மேலும் இதனை ஹதீஸ் கலா வல்லுநர்கள் விளக்குவதைப் பாருங்கள்.!

902 - وَقَوْله يَدْعُو بِهَا مَبْنِيّ عَلَى أَنَّهَا إِشَارَة إِلَى التَّوْحِيد فَصَارَ بِمَنْزِلَةِ الدُّعَاء إِلَّا أَنَّ الْإِنْسَان يَسْتَجْلِب بِالتَّوْحِيدِ مِنْ نِعَم اللَّه فَوْق مَا يَسْتَجْلِب بِالدُّعَاءِ.

حاشية السندي على ابن ماجه - (ج ٢ / ص ٢٩٠)

**தர்ஜமா:-** தவ்ஹீதின் மீது இஷாரா செய்யப்படுவதையே துஆ எனப்படுகிறது. அல்லாஹ்வின் நிஃமத்துகளை தவ்ஹீதைக் கொண்டு வேண்டுவதால் பிறகு அதுவே துஆ என மாறிவிட்டது. ஒரு மனிதன் துஆவின் மூலம் பெறுவதைவிட தவ்ஹீதின் மூலமே இறைவனின் நற்பேறுகளை அதிகம் பெறுகிறான்.

(ஆதாரம் : ஹாஷியதுஸ் ஸிந்தி அலா இப்னு மாஜா)

839 (يَدْعُو كَذَلِكَ ) : أَيْ يُشِير بِهَا أَيْ يَرْفَع إِصْبَعه الْوَاحِدَة إِلَى وَحْدَانِيَّة اللَّه تَعَالَى فِي دُعَائِهِ أَيْ تَشَهُّده وَهُوَ حَقِيقَة النُّطْق بِالشَّهَادَتَيْنِ وَسُمِّيَ التَّشَهُّد دُعَاء لِاشْتِمَالِهِ عَلَيْهِ . قَالَهُ عَلِيّ الْقَارِي.

عون المعبود - (ج ٢ / ص ٤٦٩)

**தர்ஜமா:-** இவ்வாறு துஆவில் விரலை உயர்த்தி சைக்கினை செய்தது ஓரிறைக் கொள்கையின் சாட்சியத்தை வெளிப்படுத்தவேயாகும். அதாவது விரலை உயர்த்தி சாட்சியத்தை வெளிப்படுத்துதல் உச்சரிப்பின் மூலம் வாய் மொழி சாட்சியத்தை பதிவு செய்தல் ஆகும் என்று முல்லா அலி காரி (ரஹ்) அவர்கள் கூறியதாக அவ்னுல் மாஃபூதில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**தஷஹ்ஹுத்தில் விரலால் சமிக்ஞை செய்வதேன்?**

நாம் தஷஹ்ஹுத் இருப்பில் தன் கலிமா விரலால் சமிக்ஞை செய்ய என்ன காரணம் என்பதை அறிந்து கொண்டாலே விரலை அசைக்க கூடாது என்பது தெள்ளத் தெளிவாகிவிடும்.

நாம் தொழுகையில் செய்யக் கூடிய ஒவ்வோரு அசைவுக்கும், ஒவ்வோரு செயலுக்கும் ஓர் அர்த்தம் உண்டு. வீணாக எந்த செயலையும் தொழுகையில் செய்ய நமக்கு நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் சொல்லித்தரவில்லை. அப்படியிருக்க இருப்பில் தன் ஆட்காட்டி விரலால் சமிக்ஞை செய்ய என்ன காரணம்? சமிக்ஞை என்பதற்கு ஹதீஸில் இஷாரா என்கின்ற சொல் பயன்படுத்தப் பட்டிருக்கின்றது. இஷாரா என்பதற்கு அரபி அகராதியில் நாம் மனதில் நினைக்கக்கூடிய ஓர் விஷயத்தை தன் செய்கையால் (சமிக்ஞையால்) செய்து காட்டுவதற்கு சொல்லப்படுகின்ற ஓர் சொல்லாகும்.

(ஆதாரம் : அல் முன்ஜித்)

ஆகையால் தொழுகையின் இருப்பில் அல்லாஹ் ஒருவன் என்பதை தன் மனதால் ஏற்றுக்கொண்டு, தன் சொல்லாலும் (தஷஹ்ஹுத்தின் மூலமாக) வாயால் மொழிந்து அதனை உறுதிப்படுத்தும் முகமாக தன் செயலா(சமிக்ஞையா)ல் (அல்லாஹ் ஒருவன் என்பதை) செய்து காட்டுவது தான் இஷாரா (சமிக்ஞை) ஆகும் (அதனால் தான் சுட்டு விரலுக்கு கலிமா விரல் என்றும் சொல்லப்படுகின்றது). எனவே தொழுகையில் தன் ஆட்காட்டி (கலிமா) விரலால் சுட்டிக்காட்டுவதும் சமிக்ஞை செய்வதும் தௌஹுது என்னும் ஓர் உன்னத நோக்கத்திற்காகவே அன்றி வீணான செயல் அல்ல என்பதனை புரிந்து கொள்ள வேண்டும்.

மேற்க்கண்ட விளக்கம் வெறும் அகராதியைக் கொண்டு மட்டும் அமைந்தது அல்ல மாறாக ஹதீஸ்களின் ஆதாரங்களைக் கொண்டு அமைந்ததாகும். இருப்பில் விரலை உயர்த்தி சமிக்ஞை செய்ய என்ன காரணம்? என்பதை ஹதீஸ்களே கூறுகின்றன.

**ஹதீஸ் : 1**

عَنْ أَبِي هُرَيْرَةَ أَنَّ رَجُلًا كَانَ يَدْعُو بِإِصْبَعَيْهِ فَقَالَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ أَحِّدْ أَحِّدْ قَالَ أَبُو عِيسَى هَذَا حَدِيثٌ حَسَنٌ صَحِيحٌ غَرِيبٌ.

سنن الترمذي - (٣٤٨٠)

**தர்ஜமா:-** ஹஜ்ரத் அபூஹுரைரா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள், ஒரு நபித்தோழர் தொழுகையின் இருப்பில் இருந்து கொண்டு துஆச் செய்யு(ஹாதத் ஓது)ம் பொழுது தனது இருவிரல்களையும் நீட்டி சமிக்ஞை செய்தார். இதைக் கண்ட நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஒரு விரலால் மட்டும், ஒரு விரலால் மட்டும் சமிக்ஞை செய்யுங்கள் என்று கூறினார்கள்.

இமாம் திர்மிதீ அவர்கள் இதனை ஹசன், ஸஹீஹ், கரீப் என்றுள்ளார்கள்.

(ஆதாரம் : திர்மிதீ : 3480, அஹ்மத் : 9070, நஸாயீ : 1255)

**ஹதீஸ் : 2**

1281 - عَنْ سَعْدِ بْنِ أَبِي وَقَّاصٍ قَالَ مَرَّ عَلَيَّ النَّبِيُّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ وَأَنَا أَدْعُو بِأُصْبُعَيَّ فَقَالَ أَحِّدْ أَحِّدْ وَأَشَارَ بِالسَّبَّابَةِ.

سنن أبي داود - (١٢٨١)

**தர்ஜமா:-** ஹஜ்ரத் ஸஃது பின் அபீ வக்காஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறினார்கள், நான் தொழுகையின் இருப்பில் இருந்து கொண்டு துஆச் செய்யு(ஷஹாதத் ஓது)ம் பொழுது எனது இருவிரல்களையும் நீட்டி சமிக்ஞை செய்ததை நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கண்டார்கள் அப்பொழுது கூறினார்கள் ஒரு விரலால் மட்டும், ஒரு விரலால் மட்டும் சமிக்ஞை செய்யுங்கள் என்று கூறி கலிமா விரலின் பால் சுட்டிக்காட்டினார்கள் .

(ஆதாரம் : அபூதாவூத் : 1281, நஸாயீ : 1256)

மேற்கண்ட ஹதீஸ்களுக்கு விரிவுரையாக ஸஹாபாக்களின் விளக்கத்தையும் சற்று பார்ப்போம்.

**ஹதீஸ் : 3**

عن نافع أن ابن عمر رأى رجلا يشير بإصبعيه ، فقال له ابن عمر : إنما الله إله واحد ، فأشر بإصبع واحدة إذا أشرت.

مصنف عبد الرزاق - (٣٢٤١)

**தர்ஜமா:-** ஹஜ்ரத் இப்னு உமர் ரழியல்லஹு அன்ஹு அவர்கள், ஒருவரை அவர் தம் இருவிரல்களால் சைக்கினை செய்வதைக் கண்டார்கள். அல்லாஹ் ஏக இறைவனாவான் எனவே ஒருவிரலால் (மட்டும்) சைக்கினை செய்வீராக! என்று அவரிடம் கூறினார்கள்.

(ஆதாரம் : முஸன்னப் அப்துர் ரஜ்ஜாக் : 3241)

**ஹதீஸ் : 4**

عن قتادة عن رجل عن عائشة أنها رأت امرأة تدعو وهي رافعة إصبعها التي تلي الابهامين فقالت لها عائشة : إنما هو الله إله واحد ، تنهاها عن ذلك.

مصنف عبد الرزاق - (٣٢٤٣)

**தர்ஜமா:-** ஒரு பெண்மணி தமதிரு கட்டை விரல்களுக்கு அடுத்திருக்கும் சுட்டு விரல்களால் சைக்கினை செய்தவராக துஆ செய்து கொண்டிருந்ததை பார்த்த அன்னை ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள், அல்லாஹ் ஒருவன் தான் என்று கூறி அவ்வாறு செய்வதை விட்டும் அப்பெண்மணியை தடுத்தார்கள்.

(ஆதாரம் : முஸன்னப் அப்துர் ரஜ்ஜாக் : 3243)

மேற்கண்ட ஹதீஸ்களுக்கு ஹதீஸ் விரிவுரையாளர்கள் என்ன விளக்கம் தந்திருக்கிறார்கள் என்பதையும் பார்ப்போம்.

(احِّد احِّد)

كَرَّرَ لِلتَّأْكِيـــدِ فِي التَّوْحِيـــدِ أَيْ أَشِرْ بِأُصْبُعٍ وَاحِدَةٍ لِأَنَّ الَّذِي تَدْعُوهُ وَاحِدٌ سُبْحَانَهُ ، وَأَصْلُهُ وَحِّدْ أَمْرُ مُخَاطَبٍ مِنْ التَّوْحِيدِ وَهُوَ الْقَوْلُ بِأَنَّ اللَّهَ وَاحِدٌ.

تحفة الأحوذي - (ج ٨ / ص ٤٥٤)

**தர்ஜமா:-** (ஒருமைப்படுத்து) அதாவது ஏக இறைக்கொள்கையை வலியுறுத்தும் விதமாகத்தான் இவைகளை திரும்ப திரும்ப கூறியுள்ளனர். அதாவது, ஒரு விரலைக் கொண்டு சைக்கினை செய்க! ஏனெனில் நீங்கள் ஒருவனான அல்லாஹ்வை பிரார்த்திக்கிறீர்கள். அது அல்லாஹ் ஒருவன் என்பதாகும்.

(ஆதாரம் : துஹ்பதுல் அஹ்வதிய்யி, பாகம் 8 / பக்கம் 454)

(فَقَالَ احِّد احِّد)

: أَيْ أَشِرْ بِوَاحِدَةٍ لِيُوَافِقَ التَّوْحِيد الْمَطْلُوب بِالْإِشَارَةِ .

عون المعبود - (ج ٣ / ص ٤٢٧)

**தர்ஜமா:-** சைக்கினையின் நொக்கமாகவுள்ள ஏகத்துவத்திற்கு பொருத்தமாயிருப்பதற்காக ஒரு விரலைக் கொண்டு சமிக்ஞை செய்க!

(ஆதாரம் : அவ்னுல் மஃபூத், பாகம் 3 / பக்கம் 427)

قَوْله ( احِّد احِّد)

فِي النِّهَايَة أَيْ أَشِرْ بِأُصْبُعٍ وَاحِدَة لِأَنَّ الَّذِي تَدْعُوهُ وَاحِد وَاللَّهُ تَعَالَى أَعْلَم .

حَاشِيَةُ السِّنْدِيِّ شرح سنن النسائي - (ج ٢ / ص ٣٦٥)

**தர்ஜமா:-** அதாவது ஒருவிரலைக் கொண்டே சைக்கினை செய்க! ஏனெனில் நீங்கள் யாரிடம் துஆ செய்கிறீர்களோ அவன் ஒருவனே. அல்லாஹ் மிக அறிந்தவன்!. இவ்வாறு நிஹாயாவில் கூறப்பட்டுள்து.

(ஆதாரம் : ஷரஹ் ஸுனன் நஸாயி யில் சிந்தியின் அடிகுறிப்பு, பாகம் 2 / பக்கம் 365)

قَالَ فِي النِّهَايَة : أَيْ أَشِرْ بِأُصْبُعٍ وَاحِدَة ؛ لِأَنَّ الَّذِي تَدْعُو إِلَيْهِ وَاحِد
وَهُوَ اللَّه تَعَالَى.

حَاشِيَةُ السِّيُوطِيِّ شرح سنن النسائي - (ج ٢ / ص ٣٦٦)

**தர்ஜமா:-** அதாவது ஒருவிரலைக் கொண்டு சைக்கினை செய்க! ஏனெனில் நீங்கள் ஒருவனையே பிரார்த்திக்கிறீர்கள். அவன் அல்லாஹுத்தஆலா ஆவான். இது நிஹாயா நூலில் உள்ளது.
(ஆதாரம் : ஷரஹ் ஸுனன் நஸாயி யில் ஸுயூத்தியின் அடிகுறிப்பு, பாகம் 2/பக்கம் 366)

மேற்கண்ட தெளிவான ஆதாரங்களின் மூலமாக அல்லாஹ் ஒருவனே வணக்கத்திற்குரியவன் என்பதை செயலாலும் விளக்குவதற்காகவே ஒரு விரலை உயர்த்தி நிறுத்தி சமிக்ஞை செய்யப்படுகிறது என்பதை நன்கு விளங்குகிறோம். மேலும் அஷ்ஹது அன்லா இலாஹ இல்லல்லாஹ் என்ற ஷஹாதத் சொற்றொடர்தான் விரலை சமிக்ஞை செய்யக்கூடிய இடம் என்பதற்கும் மேற்படி சுட்டிக்காட்டிய ஹதீஸ்கள் ஆதாரங்களாக அமைகின்றன.

**தெளிவான விளக்கம் :**

தஷஹ்ஹுத் இருப்பில் விரலை உயர்த்தி நிறுத்தி சமிக்ஞை செய்வது அல்லாஹ் ஒருவனே வணக்கத்திற்குரியவன் என்பதைக் காட்டுவதற்கே என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் ஸஹாபா பெருமக்களும் தெள்ளத் தெளிவாக விளக்குகிறார்கள். ஏனெனில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்த நோக்கத்திற்காக விரலை சமிக்ஞை செய்தார்கள் என்பதை அவர்களுக்கும், அவர்கள் உடன் இருந்த சத்திய ஸஹாபாக்களுக்குத் தான் அதிகமாக தெரியும். ஆகையால் அவர்கள் விளக்குவதைப் பாருங்கள்.!

**ஹதீஸ் 1**

عن ابن عباس ان رسول الله صلى الله عليه وسلم قال هكذا الاخلاص
يشير باصبعه التى تلى الابهام.

السنن الكبرى للبيهقي - (ج ٢ / ص ١٣٣)

**தர்ஜமா:-** ஹஜ்ரத் இப்னு அப்பாஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள், நிச்சயமாக நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள், கட்டை விரலுக்கு அடுத்து இருக்கும் கலிமா விரலால் சுட்டிக்காட்டுவது ஏகத்துவத்தை வெளிப்படுத்துவதாக இருக்கிறது.

(ஆதாரம் : ஸுனன் பைஹகீ, பாகம் 2 / பக்கம் 133)

**ஹதீஸ் 2**

عن مقسم ابى القاسم قال حدثنى رجل من اهل المدينة قال صليت إلى جنب خفاف بن ايماء بن رحضة فرأني اشير باصبعى في الصلوة فقال ابن اخى لم تفعل هذا قلت انى رأيت خيار الناس وفقهاء هم يفعلونه قال قد اصبت رأيت رسول الله صلى الله عليه وسلم كان يشير باصبعه إذا جلس يتشهد في صلوته وكان المشركون يقولون انما يسحرنا وانما يريد النبي صلى الله عليه وسلم التوحيد.

السنن الكبرى للبيهقي - (ج ٢ / ص ١٣٣)

**தர்ஜமா:-** ஹஜ்ரத் முக்ஸிம் அபீ காஸிம் அவர்கள் அறிவிக்கிறார்கள் ஒரு மதீனாவாசி கூறினார்கள் ஹஜ்ரத் ஹஃபாஃப் இப்னு ஈமாஃ (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களுக்கு பக்கத்தில் நான் தொழுதேன். நான் தொழுகையின் இருப்பில் இருக்கும் போது ஒரு விரலை உயர்த்தி சமிக்ஞை செய்ததை அவர் கண்டார். (தொழுகை முடிந்த உடன் நபித் தோழர் அந்த நபரை பார்த்து) எனது சகோதரரின் மகனே, நீங்கள் இருப்பில் ஒரு விரலால் சமிக்ஞை செய்தீர்களே அதற்கு என்ன காரணம் என்று கூற முடியுமா? என்று கேட்டார்கள்.

அதற்கு, நன்மக்களும், மார்க்க அறிஞர்களும் இவ்வாறு செய்ய நான் கண்டேன் (எனவே இவ்வாறு செய்கிறேன்) என்றேன். அதற்கு, நீங்கள் மிகச் சரியாக சொன்னீர்கள். நான் நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) தமது தொழுகையில், அத்தஹிய்யாத் அமர்வில் தம் விரலைக் கொண்டு சைக்கினை செய்வதைப் பார்த்துள்ளேன். அதைக் கண்ணுற்ற இணைவைப்பவர்கள், முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) நமக்கு சூனியம் செய்கிறார் என கூறுவார்கள் (ஆனால்) நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் நாட்டமோ, தவ்ஹீத்(தை வெளிப்படுத்துவது) ஆகும்.

(ஆதாரம் : ஸுனன் பைஹகீ, பாகம் 2 / பக்கம் 133)

**ஹதீஹ் 3**

عن العيزار قال سئل ابن عباس عن الرجل يدعو يشير باصبعه فقال ابن عباس هو الاخلاص.

السنن الكبرى للبيهقي - (ج ٢ / ص ١٣٣)

**தர்ஜமா:-** ஹஜ்ரத் இப்னு அப்பாஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களிடம் ஒரு மனிதன் துஆ செய்யும் போது தன் விரலால் சமிக்ஞை செய்வதைப் பற்றி வினவப்பட்டது. அதற்கு அவர் அது (விரலால் சமிக்ஞை செய்வது) இக்லாஸாகும் (ஏகத்துவத்தை வெளிப்படுத்துவதாகும்) என்று பதில் கூறினார்கள்.

(ஆதாரம் : ஸுனன் பைஹகீ, பாகம் 2 / பக்கம் 133)

**ஹதீஸ் 4**

عن ابان بن ابى عياش عن انس بن مالك قال ذلك التضرع.

السنن الكبرى للبيهقي - (ج ٢ / ص ١٣٣)

**தர்ஜமா :-** ஹஜ்ரத் அபான் பின் அபீ அய்யாஷ் அவர்கள் அறிவிக்கிறார்கள், ஹஜ்ரத் அனஸ் பின் மாலிக் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அது (விரலால் சுட்டிக்காட்டுவது) தன் பணிவை வெளிப்படுத்துவதாகும் என்றார்கள்.

(ஆதாரம் : ஸுனன் பைஹகீ, பாகம் 2 / பக்கம் 133)

ஆக நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்த நோக்கத்திற்காக விரலை சமிக்ஞை செய்தார்கள் என்பதை ஸஹாபா பெருமக்கள் தெளிவாக விளக்கிவிட்டார்கள்.

**தஷஹ்ஹுத்தில் விரலால் சமிக்ஞை செய்வதேன்? ஹதீஸ் கலாவல்லுனர்களின் விளக்கம் :**

يَنْوِي بِالْإِشَارَةِ التَّوْحِيد وَالْإِخْلَاص.

شرح النووي على مسلم - (ج ٢ / ص ٣٥٦)

**தர்ஜமா:-** இந்த சைக்கினை மூலம் ஓரிரைக் கொள்கையான தவ்ஹீதும், இக்லாஸும் அதை வெளிப்படுத்துதலுமே ஆகும்.
(ஆதாரம் : ஷரஹ் நவவி அலா முஸ்லிம், பாகம் 2 / பக்கம் 356)

يَنْوِي بِالْإِشَارَةِ التَّوْحِيـــــدَ وَالْإِخْلَاصَ . وَقَالَ اِبْنُ رَسْلَانَ : وَالْحِكْمَةُ فِي الْإِشَارَةِ بِهَا أَنَّ الْمَعْبُودَ سُبْحَانَهُ وَتَعَالَى وَاحِدٌ لِيَجْمَعَ فِي تَوْحِيدِهِ بَيْنَ الْقَوْلِ وَالْفِعْلِ وَالِاعْتِقَادِ.

تحفة الأحوذي - (ج ١ / ص ٣٢٥)

**தர்ஜமா:-** இஷாராவின் மூலமாக தவ்ஹீதும், இக்லாஸுமே நாடப்படுகிறது. இஷாராவின் நுட்பம் யாதெனில், இறைவன் ஒருவனே என்பதை சொல், செயல் மற்றும் நம்பிக்கை (ஆகிய மூன்றையும்) ஒட்டு மொத்தமாக வெளிப்படுத்துதலேயாகும். என்று இப்னு ரஸ்லான் கூறினார்.
(ஆதாரம் : துஹ்பதுல் அஹ்வதீ, பாகம் 1 / பக்கம் 325)

أَيْ يُشِير بِهَا أَيْ يَرْفَع إِصْبَعه الْوَاحِدَة إِلَى وَحْدَانِيَّة الـــلَّه تَعَالَى فِي دُعَائِهِ أَيْ تَشَهُّده وَهُوَ حَقِيقَة النُّطْق بِالـــشَّهَادَتَيْنِ وَسُمِّيَ الـــتَّشَهُّد دُعَاء لِاشْتِمَالِهِ عَلَيْهِ.

عون المعبود - (ج ٢ / ص ٤٦٩)

**தர்ஜமா:-** துஆவில் ஒரு விரலை உயர்த்தி சைக்கினை செய்வதன் மூலமாக இறைவன் ஒருவன் என்ற கூற்றை ஓங்கி ஒலிப்பதே நோக்கமாகும். அதாவது வாய்மொழி சாட்சியத்துடன் சேர்த்து அதன் அந்தரங்கத்தை வெளிப்படுத்தும் விதமாக இரு ஷஹாதத்கள் மொழியப்படுகின்றன எனவே தஷஹ்ஹுதிற்கு, அதில் துஆவின் அர்த்தம் பொதிந்துள்ளதால், துஆ எனப் பெயர் கூறுப்படுகிறது.

(ஆதாரம் : அவ்னுல் மஃபூத், பாகம் 2 / பக்கம் 469)

மேலும் இறைவன் ஒருவன் என்பதைக் காட்டுவதற்கு ஒருவிரலால் சமிக்ஞை செய்வது தான் சரியான முறையாகும். ஆனால் விரலை ஆட்டுவதைக் கொண்டு இறைவன் ஒருவன் என்பதைக் குறிப்பதாக ஆகாது, மேலும் விரலால் சமிக்ஞை செய்வதற்குண்டான நோக்கத்திற்கும் மாறுபடுகிறது என்பதை சராசரி அறிவு படைத்த எவரும் விளங்கிக் கொள்ளலாம்.

மேற்கூறப்பட்ட ஆதாரப்பூர்வ ஹதீஸ்களின் தெளிவான விளக்கங்களின் அடிப்படையில்தான் தொழுகையின் இருப்பில் விரலை ஆட்டிக் கொண்டிராமல், உயர்த்தி நிறுத்தி சமிக்ஞை செய்ய வேண்டும் என்ற சட்டத்தை அறிஞர் பெருமக்கள் குறிப்பிட்டுள்ளார்கள். அதனையே சுன்னத் ஜமாஅத்தினர்கள் இன்றளவும் பின்பற்றிக் கொண்டிருக்கின்றார்கள். ஆகையால் விரலால் சமிக்ஞை செய்வது சுன்னத்து அதனை ஆட்டுவது பித்அத்து என்பது தெள்ளத் தெளிவாகிறது.

## இரண்டாம் பகுதி

முதல் பாகத்தில் நாம் தொழுகையில் விரலை உயர்த்துவது, சுட்டிக்காட்டுவது சுன்னத் என்பதை ஹதீஸ்களின் தெளிவான ஆதாரங்களைக் கொண்டு தெளிவுபடுத்தினோம்.

இனி விரலாட்டிகள் தம் விரலாட்டும் மத்ஹபை நிலைப்படுத்துவதற்காக காட்டக்கூடிய ஆதாரங்கள் (விளக்கங்கள்) எந்த அளவிற்கு போலியானது என்பதை இந்த இரண்டாம் பாகத்தில் தெளிவு படுத்தப்போகிறோம்.

**விரலாட்டிகளின் ஆதாரங்களுக்கு தக்க பதில்கள் :**

இஸ்லாமியச் சகோதரர்களே! இந்த விரலாட்டிகள் தன் விரலாட்டும் மத்ஹபை நிலைப்படுத்த எந்த அளவிற்க்கு பாமர முஸ்லிம் சகோதரர்களை ஏமாற்றுகிறார்கள் என்பது அவர்கள் காட்டும் ஆதாரங்களை ஆராய்ந்தாலே நமக்கு புலப்பட்டுவிடும். அவர்கள் காட்டும்

## ஆதாரம் நெ.1

حَدَّثَنَا عَاصِمُ بْنُ كُلَيْبٍ قَالَ حَدَّثَنِي أَبِي أَنَّ وَائِلَ بْنَ حُجْرٍ قَالَ ... وَوَضَعَ كَفَّهُ الْيُسْرَى عَلَى فَخِذِهِ وَرُكْبَتِهِ الْيُسْرَى وَجَعَلَ حَدَّ مِرْفَقِهِ الْأَيْمَنِ عَلَى فَخِذِهِ الْيُمْنَى ثُمَّ قَبَضَ اثْنَتَيْنِ مِنْ أَصَابِعِهِ وَحَلَّقَ حَلْقَةً ثُمَّ رَفَعَ أُصْبُعَهُ فَرَأَيْتُهُ يُحَرِّكُهَا يَدْعُو بِهَا.

سنن النسائي - (١٢٥١)

**தர்ஜமா:-** ஹஜ்ரத் வாயில் இப்னு ஹுஜ்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள். நான் நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ... தனது இடது உள்ளங்கையை இடது முழங்கால் மற்றும் தொடையின் மீதும் தனது வலது முழங்கையை வலது தொடையின் மீதும் வைத்து பின்பு தனது இரு விரல்களை மடக்கி வளையமிட்டு, ஒரு விரலை உயர்த்தினார்கள். அப்போது பிரார்த்தித்தவர்களாக அதை அசைக்கக் கண்டேன்.
(ஆதாரம் : நஸாயீ : 1251, அஹ்மத் : 18115, பைஹகீ,
தாரமீ : 1408, ஸஹீஹ் இப்னு குஸைமா : 691,
ஸஹீஹ் இப்னு ஹிப்பான் : 1892)

மேற்காட்டிய இந்த ஆதாரத்தின் அடிப்படையில் தான் இந்த விரலாட்டிகள் தனது விரலாட்டும் மத்ஹபின் அஸ்திவாரத்தையே அமைத்து இருக்கிறார்கள். ஆனால் இவர்களின் அஸ்திவாரம் எவ்வாறு சுக்கு நூறு ஆகப்போகிறது என்பதை இன்னும் சிறிது நேரத்தில் கண்டு கொள்வீர்கள்.

**பதில் நெ.1**

இவர்கள் விரலாட்டலாம் என்று காட்டியிருக்கும் ஆதாரத்திற்கு முதலில் இவர்கள் பானியில் பதில் சொல்கின்றோம். அதாவது இந்த ஹதீஸ் பலவீனமானதாகும். ஏனெனில் இந்த ஹதீஸின் அறிவிப்பாளர் தொடரில் ஆஸிம் பின் குலைப் என்பவர் இடம்பெறுகிறார். இவரைப்பற்றி பலர் சரி என்று கண்டிருந்தாலும், ஹதீஸ் கலா வல்லுநரும் அறிவிப்பாளர்களை எடைபோடும் பேரறிஞருமான அல்லாமா இப்னுல் மதீனீ (ரஹ்) அவர்கள் ஆஸிம் பின் குலைபைப் பற்றி குறை கூறியிருக்கிறார்கள்.

وقال ابن المديني لا يحتج به إذا انفرد.

تهذيب التهذيب - (ج ٥ / ص ٤٩)

**தர்ஜமா:-** இப்னு மதீனீ (ரஹ்மதுல்லாஹி அலைஹி) அவர்கள் , ஆஸிம் பின் குலைப் தனித்த நிலையில் ஒரு ஹதீஸை அறிவித்தால் அதை ஆதாரமாகக் கொள்ளுதல் கூடாது என்று கூறினார்கள்.

(ஆதாரம் : தஹ்தீப் அத்தஹ்தீப்)

விரலை அசைக்கலாம் என்று வரக்கூடிய அனைத்து ஹதீஸ்களிலும் ஆஸிம் குலைப் தான் இடம் பெறுகிறார், அவர் இடம் பெறாத விரல் அசைத்தல் சம்பந்தப்பட்ட எந்த ஹதீஸும் இல்லை. எனவே, ஆஸிம் அவர்களினால் அறிவிக்கப்படும் இந்த அறிவிப்பு பலம் இழந்ததாகிவிடுகிறது. ஆகையால் இந்த ஹதீஸைக் கொண்டு விரலை அசைக்கலாம் என்ற சட்டத்தை நிர்மானிக்க முடியாது.

**ஓர் கேள்வி :**

அதாவது ஆஸிம் பின் குலைபைப்பற்றி பலர் சரி கண்டிருக்க, ஒருவர் மட்டும் குறைகூறுவதைக் கொண்டு இந்த ஹதீஸை தள்ளுபடி செய்வது நியாயம் ஆகுமா என்கின்ற ஓர் கேள்வி இங்கு எழுகிறது?

**கேள்விக்கு பதில் :**

ஓர் அறிவிப்பாளரைப் பற்றி பலர் சரி கண்டிருந்தாலும், ஒருவர் மட்டும் குறைகூறுவதைக் கொண்டு அந்த ஹதீஸை தள்ளுபடி செய்வது நமது செயல்முறை கிடையாது மாறாக இது இந்த விரலாட்டிகளான வஹ்ஹாபிகளின் சுன்னத்தே ஆகும். அதனால் தான் நாம் இவர்கள் பானியில் பதில் சொல்கிறோம் என்று முன்பே கூறினோம். இவர்கள் தான் ஓர் அறிவிப்பாளரைப்பற்றி ஒருவர் குறை கூறியிருந்தாலும் அந்த ஹதீஸை தள்ளுபடி செய்து விடுவார்கள். அதனை ஆதாரமாக ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். இதற்கு பல ஆதாரங்கள் அவர்களின் நூல்களிலேயே காணக்கிடைக்கின்றன.

உதாரணமாக முஸாபஹா செய்கின்றபொழுது அல்ஹம்துலில்லாஹ், அஸ்தஃபிருல்லாஹ் என்று ஓத வேண்டும் என்று கூறியுள்ள ஹதீஸை இவர்கள் நிராகரிப்பதற்காக, அந்த ஹதீஸில் வந்துள்ள அபூபல்ஜ் என்ற அறிவிப்பாளரை மேற்கண்டவாறே விமர்சனம் செய்து அந்த ஹதீஸை தள்ளுபடி செய்துள்ளார்கள். (பார்க்க அந்நஜாத், அல்ஜன்னத்.)

அறிவிப்பாளர் ஒருவரைப் பற்றி நிறைகாணுதலும் குறை காணுதலும் வந்திருந்தால், குறை காணுதலுக்குத்தான் முன்னுரிமைவழங்க வேண்டுமென்று பலமுறை இவர்கள் கூறியும், எழுதியுமிருக்கிறார்கள். ஏனென்றால் அந்தப் பலருக்குத் தெரியாத குறை இந்த சிலருக்குத் தெரிந்திருக்கிறது. அதை வைத்துத்தான் அந்த சிலர் இவரின் ஹதீஸை தள்ளுபடி செய்துள்ளார்கள் என்று பல இடங்களில் வாதித்துள்ளார்கள்.

இன்னும் பெரிய வேடிக்கை என்னவென்றால் இதற்கு முன்பு தக்பீர் தஹ்ரிமா நேரத்தில் மட்டும் தான் கைகளை உயர்த்த வேண்டும், மற்ற நிலைகளில் கைகளை உயர்த்துவது கிடையாது என்று வந்துள்ள ஹதீஸை ஆதாரமாக ஏற்க மறுத்து விட்டார்கள்.

அந்த ஹதீஸை நிராகரிப்பதற்கு என்ன காரணம் கூறினார்கள் தெரியுமா? அந்த ஹதீஸின் அறிவிப்பாளர் தொடரில் ஆஸிம் பின் குலைப் இடம் பெற்றுள்ளார். இவரை இப்னுல் மதீனி பலவீனப்படுத்தியுள்ளார். எனவே இந்த ஹதீஸை ஆதாரமாக ஏற்கமாட்டோம் என்று கூறியுள்ளார்கள்.

பார்க்க : அந்நஜாத் – நவம்பர் 89.

அன்று எந்த அறிவிப்பாளரை காரணமாகக் காட்டி ஹதீஸை நிராகரித்தார்களோ அதே அறிவிப்பாளர் (ஆஸிம் இப்னு குளைப்) தான் இந்த ஹதீஸிலும் இடம் பெறுகிறார். 1989ல் பலவீனமானவராக இருந்த ஆஸிம் இப்னு குலைப் இப்பொழுது எப்படி பலமானவராக மாறிவிட்டார்?

வேறு ஒன்றும் இல்லை. தாம் கூறிய கொள்கைகளுக்கு ஹதீஸ் ஒத்துவருமானால் அதில் இடம்பெறும் பலவீனமான அறிவிப்பாளரைக் கூட புஷ்டியாக்கிவிடுவார்கள்.

ஆகையால், இவர்கள் முன்பு கூறிய படி ஆஸிம் பின் குலைப் பலவீனமானவராக இருந்தால், இப்பொழுது விரலை அசைப்பதற்காக காட்டும் ஹதீஸும் பலவீனமாகும். இல்லை என்றால் தக்பீர் தஹ்ரீமா நேரத்தில் மட்டும்தான் கைகளை உயர்த்த வேண்டும். மற்ற நிலைகளில் கைகளை உயர்த்துதல் கிடையாது என்று வந்துள்ள ஹதீஸை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ஆக இப்னு மதீனீ (ரஹ்மதுல்லாஹி அலைஹி) அவர்களின் கருத்துப்படி ஆஸிம் பின் குலைப் மட்டும் இந்த ஹதீஸை தனித்து அறிவிப்பதால், ஏற்றுக் கொள்ள முடியாது.

**பதில் நெ. 2**

ஓர் வாதத்திற்கு ஹஜ்ரத் ஆஸிம் பின் குலைப் அவர்கள் இடம் பெற்றுள்ள இந்த ஹதீஸ் பலமுல்லதாக ஏற்றுக் கொண்டாலும், விரலை அசைத்தார்கள் என்று வந்துள்ள ஹதீஸைவிட விரலை அசைக்கக்கூடாது என்று வந்துள்ள ஹதீஸ் மிகவும் பலமுள்ளதாகும். இதனை இமாம் பைஹகீ (ரஹ்மதுல்லாஹி அலைஹி) அவர்கள் கூறுவதைப்பாருங்கள்!

ونحن نجيزه ونختار ما روينا في حديث ابن عمر ثم ما روينا في حديث ابن الزبير لثبوت خبرهما وقوة اسـناده ومزية رجاله ورجاحـتهم في الفضل على عاصم بن كليب وبالله التوفيق.

السنن الكبرى للبيهقي - (ج ٢ / ص ١٣١)

**தர்ஜமா :-** ஹஜ்ரத் ஆஸிம் பின் குலைப் அறிவிக்கும் ஹதீஸை, இப்னு உமர், மற்றும் இப்னு ஜுபைர் ரழியல்லாஹு அன்ஹுமா ஆகியோர் அறிவிக்கும் ஹதீஸுடன் ஆய்வு செய்ததில், இவ்விருவர் அறிவிக்கும் ஹதீஸின் சனது பலமானதாகவும், அறிவிப்பாளர்கள் அதிகமாகவும் இருப்பதால் அதையே தேர்ந்தெடுத்தோம், அல்லாஹ் தவ்ஃபீக் செய்வானாக!

(நூல் : சுனன் அல்குப்ரா பைஹகீ, பாகம் 2 / பக்கம் 131)

ஆகையால் விரலை அசைக்கலாம் என்று கூறும் ஹதீஸைவிட விரல் அசைக்கக்கூடாது என்று வந்துள்ள ஹதீஸ் மிக பலமாக உள்ளதால் அந்த ஹதீஸைக் கொண்டு சட்டம் வகிக்க முடியாது.

**பதில் நெ. 3**

மேலும் இந்த ஹதீஸ் ஷாத் என்ற நிலையைச் சேர்ந்த ஹதீஸாகும். ஷாத் என்றால் அங்கீகரிக்கப்பட்ட, நம்பிக்கைக்குரிய ஓர் அறிவிப்பாளர் அவரை விட மேலான (நம்பகமான) ஒருவர் அறிவிக்கும் தகவலுக்கு முரணாக அறிவிக்கும் நபிமொழிக்கு "ஷாத்" என்று கூறுப்படுகிறது. (அதாவது ஓர் அறிவிப்பாளரிடமிருந்து பல பேர் அந்த நபிமொழியைக் கேட்டிருக்க, அவர்களில் ஒருவர் மட்டும் மற்றவர்கள் அறிவிப்பதற்கு மாற்றமாக அறிவித்தால் அந்த அறிவிப்பே "ஷாத்" எனப்படுகிறது).

ஆகையால், விரலால் சுட்டிக்காட்டினார்கள் என்று பல (நம்பகமான) பேர், மற்றும் பல ரிவாயத்துகளில் அறிவித்திருக்க, ஒருவர் மட்டும் மேலும் ஒரே ஒரு ரிவாயத்தில் மட்டும் விரல் அசைத்தார்கள் என்று வந்துள்ளதால் இந்த ஹதீஸும் ஷாத் என்ற நிலையைச் சேர்ந்ததாகிவிடுகிறது. ஷாத் என்ற ஹதீஸை விட முதவாதிராக (பல நம்பகமான ராவிகளால்) அறிவிக்கின்ற ஹதீஸே ஏற்றுக்கொள்ள தகுதிவாய்ந்ததாகி விடுகிறது. ஆகையால் இதனடிப்படையிலும் விரலால் அசைத்தார்கள் என்று வந்துள்ள ஹதீஸை ஆதாரமாக ஏற்றுக் கொள்ள முடியாது.

**பதில் நெ. 4**

மேலும் நான்காவது காரணம் என்னவென்றால் ஆசிம் பின் குலைப் அவர்கள் மூலமாக பல மாணவர்கள் விரல் சம்மந்தமான ஹதீஸ்களை அறிவித்திருக்கிறார்கள் அவர்கள் 1. அப்துல்வாஹித், 2. ஸுஃப்யான், 3. பிஷ்ர், 4. ஷுஃபா, 5. ஜாயிதா போன்றவர்களாகும்.

இவர்களில் அப்துல்வாஹித், ஸுஃப்யான், பிஷ்ர், ஷுஃபா ஆகிய நான்கு மாணவர்களும் ஆஸிம் பின் குலைப் அவர்கள் மூலமாக தஷஹ்ஹுத்தில் விரலால் சுட்டிக்காட்டினார்கள் என்றும் விரலை உயர்த்தினார்கள் என்றும் அறிவித்திருக்கிறார்கள். இதைப் பற்றி இமாம் பைஹகீ (ரஹ்மதுல்லாஹி அலைஹி) அவர்கள், ஆஸிம் பின் குலைப் மூலமாக விரலால் சுட்டிக்காட்டினார்கள் என்று வரக்கூடிய 2613 வது ஹதீஸின் விளக்கத்தில் கீழ்கண்டவாறு விளக்கமளிக்கிறார்கள்.

وبمعناه رواه جماعة عن عاصم بن كليب.

السنن الكبرى للبيهقي - (ج ٢ / ص ١٣١)

**தர்ஜமா:-** இந்த அர்த்தத்தில் (அதாவது விரலால் சுட்டிக்காட்டினார்கள்) ஆஸிம் பின் குலைப் மூலமாக ஓர் ஜமாஅத்தே அறிவித்திருக்கின்றது, என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

(நூல் : சுனன் அல்குப்ரா பைஹகீ, பாகம் 2 / பக்கம் 131)

இமாம் பைஹகீ (ரஹ்மதுல்லாஹி அலைஹி) அவர்களின் கூற்றுப்படி பார்த்தால் ஆஸிம் பின் குலைப் மூலமாக தஷஹ்ஹுத் இருப்பில் விரலால் சுட்டிக்காட்டினார்கள் என்று ஓர் ஜமாஅத்தே அறிவித்திருக்கிறது என்பது தெளிவாகிறது.

ஆனால் இவர்களுக்கு மாற்றமாக ஆஸிம் பின் குலைப்பின் மாணவர்களில் ஒருவரான ஜாயிதா மட்டும் தான் விரலால் அசைத்தார்கள் என்று அறிவித்திருக்கிறார்கள். மேலும் விரல் சம்பந்தமாக வந்திருக்கின்ற ஆஸிம் பின் குலைப் அவர்களின் மூலம் எல்லோரும் ஏகோபித்த முறையில் விரலால் சமிஞ்ஞை செய்தார்கள் என்றும், சுட்டிக்காட்டினார்கள் என்று தான் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. ஆகையால் ஜாயிதா மட்டும் அதிகப்படியாக விரலால் அசைத்தார்கள் என்று அறிவித்திருக்கிறார்கள் என்பது தெளிவாகிறது.

இதைப்பற்றி ஆஸிம் பின் குலைப் அவர்கள் மூலம் விரலை அசைத்தார்கள் என்று வரும் அறிவிப்பின் ஹதீஸை பதிவு செய்த இமாம் இப்னு குஸைமா (ரஹ்மதுல்லாஹி அலைஹி) அவர்களே விளக்குவதைப் பாருங்கள்.

قال أبو بكر : ليس في شيء من الأخبار « يحركها » إلا في هذا الخبر زائد ذكره.

صحيح ابن خزيمة - (٦٩١)

**தர்ஜமா:-** இந்த அறிவிப்பைத் தவிர, வேறு எந்த அறிவிப்பிலும் "விரலை அசைத்தார்கள்" என்று கூறப்படவில்லை, ஆகவே ஜாயிதா அவர்களே இதனை அதிகப்படியாக (அல்லது சுயமாக) அறிவித்திருக்கிறார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

(நூல் : ஸஹீஹ் இப்னு குஸைமா, பக்கம் 691)

ஒரே ஆசிரியரிடமிருந்து 4 மாணவர்கள் விரலால் சமிஞ்ஞை செய்தார்கள் என்று அறிவித்திருக்க ஒரே ஒரு மாணவரான ஜாயிதா மட்டும் மற்ற சக மாணவர்களுக்கு மாற்றமாக விரலால் அசைத்தார்கள் என்று கூறியிருக்கிறார்கள். இவர்களில் நான்கு மாணவர்கள் கூறுகின்ற கூற்று சரியாக இருக்குமா அல்லது ஒரே ஒரு நபர் மட்டும் அறிவிப்பது ஏற்றுக் கொள்ளத்தக்கதா என்று பார்த்தால், ஒரு நபருடைய அறிவிப்பை தவிர்த்து விட்டு மற்ற எல்லோராலும் அறிவிக்கப்படும் அறிவிப்பையே ஏற்று செயல்படுத்த வேண்டும். அல்லது மற்ற சக மாணவர்களின் அறிவிப்புகளுக்கு ஒத்துப் போகும் விதத்தில் பொருள் கூறி சரிசெய்ய வேண்டும்.

இந்த நியதியின்படி ஹஜ்ரத் ஜாயிதா அறிவித்துள்ள "அசைத்தார்கள்" என்பதற்கு சமிஞ்ஞை செய்வதற்காக விரலை உயர்த்தினார்கள் என்று பொருள் கொண்டால் மற்ற சக அறிவிப்பாளர்களுடைய அறிவிப்புக்கு மாறுபடாத நிலையை ஹதீஸ் அமையும். விரலை உயர்த்துதல் என்பதும் அதை அசைப்பது என்பதும் ஒரே பொருளைத்தான் தரும்.

ஏனென்றால் கீழிருக்கும் விரலை மேல் நோக்கி தூக்கும் போது விரல் ஆடாமல் இருக்க முடியாதே. அதிலும் குறிப்பாக ஹனபி அறிஞர்களின் கருத்துப்படி உயர்த்திய விரலை திரும்பவும் கீழே விடவேண்டும். அப்பொழுது விரல் ஆட்டுதல் தெளிவாகவே தெரியவரும்.

சுருக்கமாக சொல்வதானால் ஹஜ்ரத் ஜாயிதா அவர்கள் “விரலை உயர்த்தி சமிக்ஞை செய்தார்கள்” என்பதை விரலை ஆட்டினார்கள் என்ற வார்த்தைகளைப் பயன்படுத்தி கூறியுள்ளார்கள்.

இப்படி பொருள் கொண்டால் அனைத்து அறிவிப்பாளர்களுடன் ஹஜ்ரத் ஜாயிதாவும் உடன்பட்டவராக – ஒரே கருத்தை கூறியவராக ஆக்கப்பட்டு விடுவார்.

இதைப்பற்றி இமாம் பைஹகீ (ரஹ்மதுல்லாஹி அலைஹி) அவர்கள் கூறுவதைப் பாருங்கள்.

فيحتمل ان يكون المراد بالتحريك الاشارة بها لا تكرير تحريكها فيكون موافقا لرواية ابن الزبير

السنن الكبرى للبيهقي - (ج ٢ / ص ١٣٢)

**தர்ஜமா:-** ஆட்காட்டி விரலை ஆட்டுவது என்பதன் பொருள் திரும்பத் திரும்ப அதனை ஆட்டிக் கொண்டிருந்தார்கள் என்பது அல்ல. அதனை கொண்டு சமிக்ஞை (செய்யும் போது ஏற்படுகின்ற அசைவை) பண்ணினார்கள் என்று தான் அர்த்தம் கொள்ள முடியும். அப்பொழுது தான் ஹஜ்ரத் இப்னு ஜுபைர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் (ஸஹீஹான பலமான) ஹதீஸ்களுக்கு மாறு படாமல் இருக்கும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

(நூல் : சுனன் அல்குப்ரா பைஹகீ, பாகம் 2 / பக்கம் 132)

இறைத்தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் விரலால் சமிக்ஞை செய்வார்கள், விரலை அசைத்துக் கொண்டிருக்க மாட்டார்கள் என்று அப்துல்லாஹ் இப்னு ஜுபைர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவித்த ஹதீஸ் நஸாயியில் 1253 மற்றும் அபூதாவூதில் 839 ஹதீஸாக இடம் பெற்றுள்ளது. இந்நூலின் பக்கம் 20ல் காண்க!

இது தான் இமாமுல் அஃளம் அபுஹனீபா (ரஹ்மதுல்லாஹி அலைஹி) அவர்களின் சட்டமும் ஆகும்.

ஆகையால் மேற்கண்ட எல்லா விளக்கங்களின் மூலமாக நமக்கு ஒரு விஷயம் தெளிவாகிவிடுகிறது. அதாவது இவர்கள் காட்டும் ஆதாரத்தைக் கொண்டு அமல் செய்ய முடியாது என்பது புரிந்து கொள்ள முடிகிறது.

## இரண்டாவது ஆதாரம் :

قَالَ - ثُمَّ جِئْتُ بَعْدَ ذَلِكَ فِى زَمَانٍ فِيهِ بَرْدٌ فَرَأَيْتُ عَلَى النَّاسِ جُلَّ الــثِّيَابِ يُحَرِّكُونَ أَيْدِيَهُمْ مِنْ تَحْتِ الثِّيَابِ.

سنن الدارمي - (١٤٠٨)

**தர்ஜமா:-** (ஹஜ்ரத் வாயில் இப்னு ஹுஜ்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறினார்கள் ... பின்பு குளிர்காலத்தில் நான் வந்தபோது, பல மனிதர்கள் குளிரின் காரணமாக போர்த்திக்கொண்டிருந்த நிலையில், அவர்களுடைய கைகள் அவர்களின் ஆடைகளுக்குள் ஆடிக்கொண்டிருந்ததை நான் கண்டேன்.

(ஆதாரம் : தாரமீ : 1357)

இது தான் இவர்களின் ஆட்டமத்ஹபிற்கான இரண்டாவது ஆதாரம் ஆகும். ஆனால் ஒரே ஹதீசைத் துண்டு போட்டு இரண்டு ஆதாரங்களாக காட்டி அப்பாவி மக்களை ஏமாற்றுகிறார்கள். ஆம் இவர்கள் இரண்டாவது ஆதாரமாக காட்டும் இந்த ஹதீஸ் மேற்படி முதலாவது ஆதரமாக அவர்கள் காட்டிய ஹதீஸின் தொடர்ச்சியே ஆகும். மேற்படி நாம் விளக்கிய எல்லா விளக்கங்களும், எல்லா சட்டங்களும் இந்த ஹதீஸின் தொடர்ச்சிக்கும் பொருந்தும். முதல் ஆதாரமாக காட்டிய ஹதீஸில் இடம் பெற்றுள்ள அதே ஆஸிம் பின் குலைப் தான் இந்த ஹதீஸையும் அறிவித்துள்ளார். மேற்படி காட்டிய ஹதீஸில் இடம் பெற்றுள்ள அதே ஜாயிதா தான் இதிலும் இடம் பெற்றுள்ளார். நாம் இவர்களின் முதல் ஆதாரத்திற்கு காட்டிய அத்துனை சட்டங்களும் இதற்கு பொருந்தும், வேண்டுமானால் மறுபடியும் ஒருமுறை முதாலாவது ஆதாரத்திற்குத் தந்த விளக்கங்களை படித்து பார்த்துக் கொள்ளுங்கள். இவர்களின் ஆட்ட மத்ஹபிற்கு தகுந்த ஆதாரங்கள் கிடைக்காததால் ஒரு ஹதீஸை இரு துண்டுகளாக்கி இரண்டு ஆதாரங்களாக காட்டுகிறார்கள் போலிருக்கிறது.

இவர்கள் காட்டும் முதலாவது ஆதாரத்திற்கும் இரண்டாவது ஆதாரத்திற்கும் என்ன வித்தியாசம் என்றால், முதல் ஹதீஸ் நஸாயி யில் 1251-வது ஹதீஸாக பதிவு செய்து விரல் அசைப்பதைக் கண்டேன் என்பதோடு நிருத்தப்பட்டிருக்கிறது. இரண்டாவது ஹதீஸ் தாரமியில் 1357-வது ஹதீஸாக பதிவு செய்து இதன் தொடச்சியில் "குளிர்காலத்தில் நான் வந்தபோது" என்கிற வாசகமும் பதிவு செய்யப்பட்டிருக்கின்றது அவ்வளவு தான்.

சரி ஒரு வாதத்திற்கு இந்த ஹதீஸை இரண்டாவது ஆதாரமாக எடுத்துக்கொண்டாலும் இவர்கள் கூறும் விரல் அசைத்தல் என்கிற சட்டத்திற்கு இந்த ஹதீஸில் எந்த ஆதாரமும் கிடையாதே. ஏனெனில் இந்த ஹதீஸில் குளிரின் காரணமாக கைகள் அசைந்து கொண்டிருந்தன என்று தான் இருக்கின்றதே ஒழிய விரல் அசைந்து கொண்டிருந்ததைப்பற்றி ஒரு வாசகமும் இல்லையே. இந்த ஹதீஸின் அடிப்படையில் இவர்கள் கைகளை அல்லவா அசைக்க வேண்டும்! ஏன் விரலை அசைக்கிறார்கள்? குளிரினால் தான் கை அசைந்தது என்று தெளிவாக கூறப்பட்டிருக்கும் போது இவர்கள் ஏன் கோடை காலத்திலும் அசைத்துக் கொண்டிருக்கிறார்கள்? ஆதாரங்கள் இல்லை என்பதற்காக இப்படியா அப்பாவி இளைஞர்களை ஏமாற்றுவது. ஹதீஸின் அரபி அர்த்தத்தை அவர்களால் விளங்க முடியாது என்பதற்காக இப்படியா மோசம் செய்ய வேண்டும், தன் தொழுகையை கெடுப்பதுமில்லாமல் அவர்களை நம்பியுள்ளவர்களின் தொழுகையையும் அல்லவா நாசம் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

## முன்றாவது ஆதாரம் :

عن ابن عمران النبي صلى الله عليه وسلم قـال تحـريك الاصبـع في الصلوة مذعرة للشيطان.

السنن الكبرى للبيهقي - (ج ٢ / ص ١٣٢)

**தர்ஜமா:-** ஹஜ்ரத் அப்துல்லாஹ் இப்னு உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள். தொழுகையில் சுட்டு விரலை அசைப்பது ஷைத்தானை திகிலடையச் செய்துவிடும்.

(ஆதாரம் : பைஹகீ 2216)

இந்த ஹதீஸினுடைய தரத்தைப் பார்த்து நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள். இந்த ஹதீஸை கொண்டு அமல் செய்ய சொல்கிற இவர்கள் எந்த அளவிற்கு மக்களை ஏமாற்றுகிறார்கள் என்பதனையும் தெரிந்து கொள்ளுங்கள்!

முதலில் இந்த ஹதீஸை பதிவு செய்த இமாம் பைஹகீ அவர்கள் அந்த ஹதீஸின் முடிவிலேயே என்ன கூறுகிறார்கள் என்பதைப் பாருங்கள்.!

تفرد به محمد بن عمر الواقدي وليس بالقوى

السنن الكبرى للبيهقي - (ج ٢ / ص ١٣٢)

**தர்ஜமா:-** இதில் முஹம்மது பின் உமர் அல்வாகிதீ தனித்திருக்கிறார் (அதாவது எல்லோரும் விரலால் சுட்டிக்காட்டுவது ஷைத்தானை திகிலடையச் செய்துவிடும் என்று கூறியிருக்க, இவர் மட்டும் விரல் அசைப்பது ஷைத்தானை திகிலடையச் செய்துவிடும் என்று கூறியிருக்கிறார்) ஆனால் அவர் நம்பத்தகுந்தவர் இல்லை.
(ஆதாரம் : பைஹகீ 2216)

மேலும் முஹம்மது பின் உமர் அல்வாகிதீயை பற்றி முஹத்திஸீன்களின் கருத்துக்கள் கீழ்வருமாறு.

قال البخارى : الواقدى متروك الحديث.

தர்ஜுமா :- இமாம் புகாரி கூறுகிறார்கள் : வாகிதீ அறிவிக்கும் ஹதீஸ் ஏற்கத்தகாத விடப்பட வேண்டிய ஒன்றாகும்.

قال معاوية بن صالح : قال لى أحمد بن حنبل : هو كذاب.

தர்ஜுமா :- முஆவியா பின் ஸாலிஹ் அவர்கள் கூறுகிறார்கள் : என்னிடம் அஹ்மத் பின் ஹம்பல் அவர்கள் வாகிதீ ஒரு பொய்யர் என்றார்கள்.

قال معاوية أيضا عن يحيى بن معين : ضعيف.

தர்ஜுமா :- முஆவியா பின் ஸாலிஹ் அவர்களே கூறுகிறார்கள் என்னிடம் யஹ்யா பின் மயீன் அவர்களும் வாகிதீ பலவீனமானவர் என்றார்கள்.

قال مسلم : متروك الحديث

(تهذيب الكمال)

**தர்ஜுமா :- இமாம் முஸ்லிம் கூறுகிறார்கள் : வாகிதீ அறிவிக்கும் ஹதீஸ் விடப்படவேண்டும் (ஏற்கக்கூடாது).**

**ஆதாரம் : தஹ்ஸீபுல் கமால்**

قال النسائی فی " الضعفاء " : الكذابون المعروفون بالكذب

**தர்ஜுமா :- இமாம் நஸாயீ தன்னுடைய ‘ளுஃபா’ என்ற நூலில் : வாகிதீ பொய்யர்களில் ஒருவர் ஆவார் அவர் பொய்யால், பிரபல்யம் அடைந்தவராவார் .**

قال النووی فی " شرح المهذب " فی کتاب الغسل منه : الو اقدی ضعیف باتفاقهم

**தர்ஜுமா :- இமாம் நவவீ ‘ஷரஹ் அல்முஹத்தப்’ கிதாபில் கூறுகிறார்கள் : வாகிதீ பலவீனமாவர் என்பது ஒட்டு மொத்த கருத்தாகும்.**

(تهذيب التهذيب)

**ஆதாரம் : தஹ்தீபுத் தஹ்தீப்**

علی بن المدینی یقول: الو اقدي يضع الحديث

المجروحين - (ج ٢ / ص ٢٩٠)

**தர்ஜுமா :- அலி பின் அல்மதீனீ கூறுகிறார்கள் : வாகிதீ ஹதீஸை இட்டுக்கட்டுபவர் ஆவார்.**

**ஆதாரம் : அல்மஜ்ரூஹீன்**

## விரலாட்டிகளுக்கு நமது கேள்வி?

விரலாட்டிகள் தனது விரலாட்டும் மத்ஹபை நிலைநாட்ட பல விதமான தில்லுமுல்லுகளை செய்திருக்கிறார்கள் அதில் சிலதை இங்கு விவரிப்பது நமது கடமையாகும். இதைச் சொல்லித் தான் இவர்கள் அப்பாவி இளைஞர்களை ஏமாற்றுகிறார்கள்.

**நெ. 1 :** விரல்அசைப்பது பற்றிய ஹதீஸ் புகாரியில் உள்ளது என்று விரலாட்டிகள் கூறுகிறார்கள்.

**நமது கேள்வி :** புகாரி ஷரீபில் ஒரு ஹதீஸ் விரல் அசைப்பது பற்றி காட்டச் சொல்லுங்கள், கியாமத்து நாள் வரை காட்ட முடியாது.

**நெ. 2 :** நாம் ஸஹீஹான ஹதீஸை தான் பின்பற்றுகிறோம் ஆகையால் விரல் அசைத்தல் என்பது ஸஹீஹான ஹதீஸில் உள்ளது என்று கூறுகிறார்கள்.

**நமது கேள்வி :** நாம் அவர்கள் காட்டும் ஆதாரங்களின் நிலை என்ன என்பதை தெளிவுபடுத்திவிட்டோம். வேறு ஏதாவது ஸஹீஹான ஹதீஸ் இருந்தால் காட்டட்டுமே பார்க்கலாம்!.

**நெ. 3 :** இவர்கள் ஹதீஸில் யாரையோ என்ற வார்த்தையும், துஆ என்பதற்கு அழைப்பது போல் என்ற சொல்லும் புகுத்தி நபி (ஸல்) அவர்கள் தொழுகையில் விரலை யாரையோ அழைப்பதுபோல் அசைத்தார்கள் என்று தவறான அர்த்தத்தை தருகிறார்கள்.

**நமது கேள்வி :** ஹதீஸின் அரபி முலத்திலிருந்து "யாரையோ" என்ற வார்த்தையோ, "(அழைப்பது) போல்" என்ற சொல்லையோ காட்டச் சொல்லுங்களேன் பார்ப்போம்.

**நெ. 4 :** விரலால் அசைப்பது தொழுகையில் ஷைத்தானை விரட்டுவதற்காகும் என்று சிலர் கூறுகின்றனர்.

**நமது கேள்வி :** ஸஹீஹான ஒரே ஒரு ஹதீஸின் மூலமாக விரலை அசைப்பது ஷைத்தானை விரட்டும் என்று காட்டச்சொல்லுங்களேன் பார்ப்போம்.

## இறுதியாக :

விரலை ஆட்டிக் கொண்டே இருக்க வேண்டும் என்று கூறும் இவர்கள் எப்படி ஆட்ட வேண்டும் என்பதையும் ஹதீஸ்களைக் கொண்டு விளக்கிக் கூறுவார்களா?

1. விரல் அசைத்தல் எந்த திசையை நோக்கி இருக்க வேண்டும்?
2. எந்த வகை அசைத்தலாக இருக்க வேண்டும்?
3. விரலை மேலும் கீழுமாக அசைக்க வேண்டுமா?
4. விரலை நீட்டி வைத்துக்கொண்டா? குறுக்கி வைத்துக்கொண்டா?
5. முன்னாலும் பின்னாலுமாக ஆட்டவேண்டுமா?
6. தொடர்ந்தா? அல்லது விட்டுவிட்டா?
7. வேகமாகவா? அல்லது மெதுவாகவா?
8. வலது பக்கமா? அல்லது இடது பக்கமா?
9. அல்லது அவரவர் மனதில் வந்தபடியெல்லாம் ஆட்டிக் கொள்ளலாமா?

இந்தக் கேள்விகளுக்கு விரல் அசைப்பவர்கள் தங்களுடைய சொந்த அறிவைக் கொண்டு பதில் கூறாமல் ஹதீஸ்களைக் கொண்டு பதில் கூற முடியுமா? கியாமத்து நாள் வரை சந்தர்ப்பம் தருகிறோம். நிரூபிக்கட்டும் பார்க்கலாம்!

# முடிவுரை

சகோதரர்களே! நாம் நமது சிறு முயற்சியின் மூலம் நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தொழுகையில் விரலை எப்படி வைத்திருந்தார்கள் என்பதை ஆதாரங்களுடன் நிரூபித்தோம். பின்பு அவர்கள் காட்டும் ஆதாரங்களின் உண்மை சொரூபம் என்ன என்பதனையும் விளக்கினோம்.


அவர்கள் காட்டும் ஆதாரம் பலவீனமானது தெளிவில்லாதது என்பதையும் பார்த்தோம். இவ்வாறான காரணங்களினால் தான் அவர்களிலேயே சிலர் விரலை அசைக்காமல் இருக்கிறார்கள்.

மேலும் பலமான மற்றும் தெளிவான ஆதாரங்களான விரலை சமிக்கை செய்வது தான் சரியானது என்பதனையும் நிரூபித்தோம்.

ஆகையால் விரலால் சுட்டிக்காட்டுவது சுன்னத்து. அதனை ஆட்டுவது பித்அத் ஆகும்.

வல்லாஹு அஃலம்

அல்லாஹ் தஆலா, நம்மை உண்மையை விளங்கி அதன் படி அமல் செய்ய அருள் புரிவானாக! ஆமீன்!




TOP

ACCURA

AUTOGREEN

# Eleven's Auto Parts

Dealer in :

All Plastic Items for All Motorcycles

Cell: 98414 66558 / 9043612658

New.No:17, Old.No:8, Maroof Sahib Street, (Near Sayeedia Masjid),
Mount Road, Chennai - 600 002.

M. Samiullah Sheriff

Cell : 95662 05728

# PLEASANT ENTERPRISES

**Dealing : Stationery, Printing & Room Spray**



**#7/13, Feroz Sahib Street, Royapettah, Chennai - 600 014.**

**Phone : 28582656**

# Umar Fancy

*Fancy Goods, Gift Articles,*
*Gold Covering Jewelleries, Toys*
*and Stationaries*

**No1, Fakir Sahib Street,**
**Jam Bazaar, Triplicane,**
**Chennai - 600 005.**



# Imaam Ahmed Raza
Regd.
# Association

**Contact :**

**9840115998, 9566058688, 9841466558**

**9841807240, 95662 05728**

# M.F.H.&CO

**PURE HERBAL MEDICINE STOCKLIST : - UNANI, SIDDHA & AYURVEDIC**

## M.F.UNANI VAIDYA SALAI

Since 1950

இங்கு : இருதயஅடைப்பு, காரனரி, இருதயத்தில் ஓட்டை, இருதய படபடப்பு, அல்சர், தைராய்டு, மூலம், குழந்தையின்மை, ஆண்மைகுறைவு, பெண்களின் மலட்டுத்தன்மை, மூட்டுவலி, காக்காய்வலிப்பு, சைனஸ், ஆஸ்த்துமா, சரும நோய்கள் போன்ற அனைத்து நோய்களுக்கும் சிறப்பு சிகிச்சை அளிக்கப்படும்



## Dr.GULAM HYDER QURAISHI

**contact : 9841807240**

**New No 99, Jani Jahan Khan Road, Royapettah,**
**Chennai - 600 014. (Opp. to Jambazaar Police Station Road)**